# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 11 வியாழக்கிழமை (25-06 1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:179

## பதவிக்காலம் முடிவடைய முன்னரே ஜனாதிபதி தேர்தல் நடத்தத் தயார்!

### ரணிலின் சவாலுக்கு சந்திரிகா பதில்

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடிவடைய முன்பே ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் தயார் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அறிவித்துள்ளார்.

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஊடாக இத்தகவலை ஜனாதிபதி அனுப்பியுள்ளார்.

அண்மையில் தங்கலையில் நடந்த கூட்டமொன்றில் ஐ. தே. க. தலைவர் பேசுகையில், ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடத்துவதற்கு சந்திரிகா தயாரா என்று சவால் விட்டிருந்தார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண நிறுத்தத்தை மீள்பரிசீலனை செய்க

### ஆயர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாவட்டத்தில் சுமார் 34 ஆயிரம் குடும்பங்களின் உலர் உணவு நிவாரணத்தை நிறுத்த எடுக்கப்பட்ட தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு மக்களின் சார்பில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வந். தோமஸ் சவுந்தரநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக யாழ். ஆயர் விடுத்த பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

யாழ். மாவட்டத்தில் உலர் உணவு நிவாரணம் பெறும் குடும்பங்களில் 34 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தை நிறுத்த எடுக்கப்பட்ட தீர்மா

(10 ஆம் பக்கம் பார்க்க)

# களுத்துறை தமிழ் கைதிகள் உண்ணாவிரதம் ஆரம்பம்!

## வாஜ்பாயின் கொடும்பாவி எரிப்பு!

சென்னை ஜூன் 25

மதுரையில் நேற்று அ. தி. மு. க. தொண்டர்களால் பிரதமர் வாஜ்பாயின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் தி. மு.க அரசைக் கலைக்க வேண்டும் என்று கோரி நடத்தப்

(10 ஆம்பக்கம் பார்க்க)

## கட்டம் கட்டமாக நடத்துவதற்கு முடிவு

கொழும்பு, ஜூன் 25

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் விசாரணையின்றி நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் அல்லது விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தே அவர்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படவிருக்கும் இப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டபடி நாளை நல்லூரில்உண்ணாவிரதம்

### ஏற்பாடுகள் பூர்த்தி

யாழ்ப்பாணம். ஜூன் 25

மனித உரிமை தினமான நாளை வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக நடைபெறவிருக்கும் உண்ணாவிரதத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளன என உண்ணாவிரத ஏற்பாட்டுக்குழு தெரிவித்தது.

நேற்று மாலை நடந்த கலந்துரையாடலின் பின்னர் விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பென்ஸ் கார் வேண்டாம் என்கின்றார் மகாநாயக்கர்!

### பராமரிக்க முடியாதாம்

கொழும்பு, ஜூன் 25

தமக்கு வழங்கிய பென்ஸ் காரை மீளப்பெறுமாறு 4 மகாநாயக்கர்களும் ஜனாதிபதியிடம் கோரியுள்ளனர்.

அஸ்கிரிய பீடாதிபதி வண பலிப்பானேஸ்ரீ சந்திரானந்த தேரர் உட்பட இந்த நான்கு மகாநாயக்கர்களுக்கும் பல லட்சம் ரூபா பெறுமதியான பென்ஸ் கார்களை ஜனாதிபதி அன்பளிப்பாக வழங்கியிருந்தார்.

இந்தக் கார்களுக்கு வரி மற்றும் காப்புறுதிகளுக்கு தாம் பல லட்சம் ரூபா செலுத்த வேண்டும் எனக்கோரப்பட்டுள்ளதாகவும் —

அந்தளவு தொகையை தம்மால் வழங்க முடியாததால் கார்களை மீளப் பெற்றுக்கொள்ளுமாறும்— அவர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுள்ளனர்.

(இ-3)



அது தான் பாருங்கோ சொல்லுறது விரலுக்கேற்ற வீக்கம் இருக்க வேணும் எண்டு...

## ஆடைத் தொழிற்சாலை தீயில் எரிந்து நாசம்

### கட்டுநாயக்காவில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 25

கட்டுநாயக்காவில் அமைந்துள்ள கொரியன்ஸ்—லங்கா ஆடைத் தொழிற்சாலையில் நேற்றுக்காலை திடீரெனதீப் பற்றிக் கொண்டது,

சுதந்திர வர்த்தக வலயப் பகுதியில் அமைந்துள்ளஇந்த தொழிற்சாலையில்ஏற்பட்ட தீயை விமானப் படையின் இரு ஹெலிகள் அணைக்கும் பணியில் ஈடுபட்டன.

தீகட்டுப்பாட்டில்வராததையடுத்து கொழும்பில் இருந்து தீயணைக்கும் படையினர் வரவழைக்கப்பட்டனர்.

தீ பற்றியதற்கான காரணம் தெரியவரவில்லை.

தீ விபத்தில் சிக்கிய 17 தொழிலாளர்கள் மூர்ச்சையடைந்தனர்.

இந்த விபத்தால் சுமார் பத்தரை லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான பொருள்கள் நாசமாகின எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

### நிவாரண நிறுத்தம் குறித்து

## வெளிநாட்டுத் தூதர்களைச் சந்தித்து டக்ளஸ் விளக்கி வருகின்றார்

கொழும்பு, ஜூன் 25

இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கி வந்த உலர் உணவு நிவாரணத்தைக் குறைக்கும் அரசின் முடிவால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு ஈ. பி. டி. பி. அமைப்பின் தூதுக்குழு விளக்கி வருகிறது.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவே வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கி வருகிறது.

இலங்கைக்கு உதவும் நாடுகளினதும், இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அக்கறையுள்ள நாடுகளினதும் தூதுவர்களை இக்குழு சந்தித்து வருகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வம்சாவளி மக்கள் பேரவை என்ற பெயரில் கூட்டமைப்பு இயங்கும்

### மயில் சின்னம் ஒதுக்கப்பட்டது

இ. தொ. கா. தலைவரான அமைச்சர் எஸ். தொண்டமான் தலைமையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கூட்டமைப்புத் தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"இந்திய வம்சாவளி மக்கள் பேரவை" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தக் கூட்டமைப்பு 'மயில்' சின்னத்தைத் தெரிவு செய்துள்ளது.

மலையகத்திலுள்ள பல்வேறு தொழிற் சங்கங்கள் இந்தக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் இந்தக் கூட்டமைப்புச் சார்பாக மத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், மேல் மாகாணம் ஆகிய இடங்களில் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# திகதி காலாவதியான பொருள்களை விற்பனை செய்த பலர் அகப்பட்டனர்

திருநெல்வேலி, ஜூன் 25 சுகாதாரத் திணைக்களத் திடீர் பரிசோதனைக் குழுவினர் திருநெல்வேலி, கல்வியங்காடு ஆகிய இடங்களிலுள்ள கடைகளிலும் வியாபார நிலையங்களிலும் நேற்றுத் திடீர் சோதனை நடத்திப் பெருந்தொகையான திகதி காலாவதியான-பாவனைக்கு உதவாத — பிஸ்கட் வகைகள், குழந்தைகளுக்கான 'கோல்டன் கவ்', ரின்பால், ரின் மீன், ஜாம் ஆகியவற்றை கைப்பற்றினர்.

யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு இது தொடர்பாகப் பொது மக்கள் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்து இந்தத் திடீர் சோதனை நடத்தப்பட்டது.

சில கடைகளில் ஏற்கனவே திகதி காலாவதியான பிஸ்கட் பைக்கெட்டுக்களை பிரித்து எடுத்துத் தனியாகப் பைக்கெட் செய்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்ததும்கண்டு பிடிக்கப்பட்டது.

இவ்வாறு கண்டுபிடிக்கப் படடுக் கைப்பற்றிய பிஸ்கட்டுகளும் ஏனைய பொருள்களும் அந்த இடத்தில் வைத்தே சுகாதாரப் பரிசோதகர்களினால் அழிக்கப்பட்டன.

பொது மக்கள் இது விடயத்தில் மிக விழிப்பாக இருந்து பொருள்களை வாங்கும்போது கவனமாகபார்த்து வாங்கவேண்டும் என்று யாழ். சுகாதாரத்திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-135)

# நல்லூரில் நள்ளிரவுவேளை வீட்டில் துணிகரத் திருட்டு

திருநெல்வேலி, ஜூன் 25 நள்ளிரவு வேளை வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த நித்திரையில் இருந்த போது உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த சூட்கேஸ் ஒன்றில் சாறிகளுக்கிடையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஐந்தரைபவுண் தாலிக்கொடி ஒரு சோடிகாப்பு, 500ரூபா பணம் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு ஒரு மணியளவில் நல்லூர் சிவன் புது வீதியிலுள்ள ஒரு வீட்டில் இடம்பெற்றது.

சூட்கேசை வெளியே எடுத்துச் சென்ற திருடர்கள் நகைகளையும், காசையும் எடுத்துக் கொண்டு சூட்கேசை அவ்விடத்தில் கைவிட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை —

இவ் வீட்டில் நித்திரையிலிருந்த பெண்கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியையும் அறுக்க திருடர்கள் முயற்சி செய்ததாகவும் அவர் சத்தமிட்டதும் முயற்சியை கைவிட்டு திருடர்கள் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இத் திருட்டுச் சம்பவம் பற்றி யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

# சுகாதார பரிசோதகர் பற்றாக்குறை

சண்டிலிப்பாய், ஜூன் 25 மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு பற்றாக் குறை நிலவிவருகின்றது. ஏழு பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இப் பிரிவில் கடமையாற்ற வேண்டியிருந்த போதிலும் தற்போது இருவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர். (ஐ-135)

---


## வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

பழைய மாணவர் மன்ற
வருடாந்த

## ஒன்றுகூடலும் - பொதுக்கூட்டமும்

எமது மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 19-07-98 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் புதிதாகச் சேர விரும்பும் அங்கத்தவர்களையும் செயலாளருடன் தொடர்பு கொண்டு தங்களின் தற்போதைய இருப்பிட விலாசங்களை அறியத்தரவும்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் இருவாரங்களுக்குள் எழுத்து மூலம் செயலாளரிடம் சமர்ப்பிக்கலாம்.

மதிய போசனத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் வருகையினை உறுதிப்படுத்தி 14-07-98க்கு முன்னர் அறியத்தரின் மதிய போசனத்திற்கான ஒழுங்குகள் செய்யப்பெரும் உதவியாக இருக்கும்.

நன்றி

தங்கள் சேவையிலுள்ள
ச. ஜெகதீஸ்வரராஜா
செயலாளர்.

(57116)


---


## நன்றி அறிவித்தல்

திருமதி
**திரவியம் மகேந்திரன்**

12—06—1998 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்த இரத்தின மாளிகை, பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி திரவியம் மகேந்திரனின் மறைவையொட்டி, எமது துயரத்தில் பங்கு கொண்டு அன்னாரின் இறுதிக் கிரியைகளிலும் பங்கு பற்றி எமக்கெல்லாம் ஆறுதல் கூறிப் பல வழிகளிலும் கைகொடுத்து உதவிய எமது உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் சிரந்தாழ்த்தி எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர், மைத்துனிமார்.

''இரத்தின மாளிகை''
பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்.

தகவல்
ம. தயாபரன்
கிராமசேவையாளர்- J/118,
கோண்டாவில் மத்தி கிழக்கு
(57114)


---


## வீடமைப்பு நகர சீர்திருத்த கட்டளைச் சட்டம்
[பிரிவு 268] இன் பிரகாரமான

## அறிவித்தல்

நல்லூர்ப் பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடங்கள் கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தினபடி தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஆகவே, கட்டடங்கள் கட்டுவதற்கும், பழைய கட்டடங்களைப் புதுப்பிப்பதற்கும் பிரதேச சபையிலிருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து நல்லூர்ப் பிரதேச சபையின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். மேலதிக விவரங்களை நல்லூர்ப் பிரதேச சபைத் தலைமைப் பணிமனையிலும் நல்லூர்/கொக்குவில் உப - அலுவலகங்களிலும் அறிந்து கொள்ளலாம்.

பொ. வைரமுத்து
செயலாளர்
நல்லூர் பிரதேச சபை

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
23 - 06 - 1998

(சி-4099)


---


## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.

வியாழன், வெள்ளி

அஜித்குமார் - சிம்ரான்
கவுண்டமணி, செந்தில்
நடித்த
**அவள் வருவாளா**

சனி, ஞாயிறு மட்டும்
கமலஹாசன் - ஸ்ரீதேவி
ஸ்ரீபிரியா, மனோரமா
நடித்த
**வாழ்வே மாயம்**
மனதை உருக்கும்
குடும்பச் சித்திரம்.

நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56999)


---


## நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்;
அகல வெண் திரையில்
25-06-98 வியாழன் முதல்
சுப்பர் ஸ்ரார் ரஜனி,
ரகுவரன், மீனா நடித்த
**முத்து**
(C. D. வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
(57115)


---


## ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.

3 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
**பாட்ஷா**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)


---


இரசாயனவியல்
கைநூல்
சூழல் மாசடைதல்
ஆக்கம்:
திரு மகாதேவா
**ஸ்ரீ சுப்பிரமணிய**
புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(55442)


---


## கலை விருந்து

உடுவில் மகளிர் கல்லூரி
தமிழ் மன்றத்தினரால்

15 — 06 — 1998 அன்று நடத்தப்படவிருந்த கலை விருந்து எதிர்வரும் 27 — 06 — 1998 அன்று இரு நிகழ்வுகளாக இடம்பெற உள்ளது.

நேரம்: காலை 9.30 மணி (S.L.T.)
மாலை 3.00 மணி ,,

நுழைவுச் சீட்டுகள் மண்டபவாயிலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

தமிழ் மன்றம்,
உடுவில் மகளிர் கல்லூரி.

(சி/4109)


---


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியர்
திரு. க. சாம்பமூர்த்தி
அவர்களின் அன்புத் தாயார்

**கந்தையா இராசம்மா**

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி,
புத்தூர்.

(57119)


---


## OBITUARY

**Dr. K. Arulampalam** (R.M.P)

Dr. K. Arulamplam (R.M.P) beloved husband of Kanmani Precios, father of David, Ranji, Charles and Daho, Father - in - Law of Shantha, Ravi, Berni & Thaya, Grand father of Vidiya, Neville, Niel, Timmy Jeremy and Jessica entered glory 23-06-98 Funeral at 'Retnapathy', Karanavai East on 25-06-98 at 2.30 p.m.

David Arulampalam
(son)

Navalar Madam,
Karanavai East,
Karaveddi.

(C/4100)


---


## மரண அறிவித்தல்

**சிதம்பரப்பிள்ளை துரைராசசிங்கம்**

(ஆய்வுகூட உதவியாளர், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை)

சிதம்பரப்பிள்ளை துரைராசசிங்கம் 24. 06. 98 புதன் கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை பூரணம் ஆகியோரின் புதல்வனும், பகவதியின் அன்புக் கணவனும், செல்வி, சிறிதர் (உயர்தர மாணவன், ஹாட்லிக் கல்லூரி), ராஜ்குமார், ராதா, சுஜீபன், ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்கினேஸ்வரமூர்த்தியின் மாமனாரும், காலஞ்சென்ற இராசரட்ணம், பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம், சொர்ணலட்சுமி, அரியமலர் ஆகியோரின் சகோதரியும், நடராசா, செல்வராசா, தர்மராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25. 06. 98) வியாழக்கிழமை 1. 00 மணியளவில் அவரது பருத்தித்துறை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கடற்கரை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
து. பகவதி (மனைவி)
மா. செல்வராசா
(மைத்துனர்)

நீதிமன்ற வீதி,
பருத்தித்துறை.

(57118)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் பொது நூலகம்.

## பி. ஜே. பி. - அ. தி. மு. க. விரிசல்

# அத்வானிக்கு மறதிநோய்! ஜெயலலிதா சாடுகிறார்!





சென்னை, ஜூன் 25

மத்திய உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி ஒருவகை மறதி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில், நாட்டின் பாதுகாப்புக் குறித்து அக்கறை அற்ற அவரைப் போன்ற ஒருவர் உள்துறை அமைச்சர் பதவியில் இருப்பது வருந் தத்தக்கது.

முன்னாள் முதலமைச்சரும் அ. தி.மு.க. பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா ஜெயராம் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

தமிழகத்தில் தி. மு. க. அரசை பதவி நீக்கும் விவகாரம் தொடர்பாக அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று முன்தினம் சென்னையில் 15 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையிலேயே உள்துறை அமைச்சர் மீது அவர் இவ்வாறு காட்டமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாரதீய ஜனதாக் கட்சிக்கும் அதன் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் அ. தி. மு. கவுக்கும் இடையிலான விரிசல் அதிகரித்து வருகிறது.

தமிழகத்தில் தி. மு. க. அரசை பதவிநீக்குமாறு அ. தி. மு. க. தொடர்ந்து விடுத்த கோரிக்கைகளுக்கு மத்திய அரசு செவிசாய்க்காததை அடுத்தே இரு கட்சிகளுக்கும் இடையே விரிசல் ஏற்பட்டிருக்கிறது.

பாரதீய ஜனதாக்கட்சி அரசு தமிழ் நாடு உட்பட எந்த மாநில அரசுகளையும் கலைக்காது என்றும் உள்துறை அமைச்சர் அத்வானி சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

தமிழ் நாட்டில் தி. மு. க. அரசை கலைப்பதாக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு உறுதிமொழி அளித்ததாக ஜெயலலிதா கூறியதகவலையும் அவர் மறுத்திருந்தார்.

அத்வானியின் இந்த மறுப்புக்கு பதிலடியாகவே ஜெயலலிதாவின் அந்த அறிக்கை அமைந்துள்ளது.

கோவை குண்டு வெடிப்புகளை அடுத்து தி. மு. க. அரசு கலைக்கப்படும் என்ற தகவலை மத்திய அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் மூலம் அமைச்சர் அத்வானி தமக்கு அனுப்பியதாக ஜெயலலிதா அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். சிலவற்றைமட்டும் மறந்துவிடும் ஒரு வகை மறதி நோயால் அத்வானி பாதிக்கப்பட்டுள்ளார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ஐ)

## FRANCE 98

### இன்று 4 ஆட்டங்கள்

பிரான்ஸில் நடைபெறும் 16ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் இவங்கை நேரப்படி இன்றிரவு நான்கு ஆட்டங்கள் நடைபெற உள்ளன.

★ இரவு 8 மணி — நெதர்லாந்து எதிர் மெக்ஸிக்கோ.

★ இரவு 9 45 மணி—பெல்ஜியம் எதிர் தென்கொரியா.

★ அதிகாலை 1 மணி — ஜேர்மனி எதிர் ஈரான்.

★ அதிகாலை 3-45மணி— அமெரிக்கா எதிர் யூகோஸ்லாவியா. (ஐ-6)

### ஜேர்மன் ரசிகர்கள் கைது

லென்ஸ் நகரில் ரகளையில் ஈடுபட்ட ஜேர்மன் நாட்டு ரசிகர்கள் 10 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

யூகோஸ்லாவிய அணிக்கும், ஜேர்மனி அணிக்கும்இடையிலான போட்டி கடந்த ஞாயிறன்று தொடங்குவதற்கு முன்னர் இச்சம்பவம் இடம் பெற்றது.

### 2 போட்டிகளில் விளையாடத் தடை

காமரூன் வீரர் ரேமண்ட் கள்ளாவுக்கு இரண்டு போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதன்கிழமை நடைபெற்ற இத்தாலி காமரூன் போட்டியில் முரட்டுத்தனமான ஆட்டத்தை மேற்கொண்டதால் கள்ளாவுக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டது. இதையடுத்து அவருக்கு இரண்டு போட்டிகளில் விளையாடத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

# உலக சம்பியனான பிறேசில் அணி நோர்வே அணியிடம் தோல்விகண்டது!

பாரிஸ், ஜூன் 25

பிரான்ஸ்ஸில் நடைபெற்றுவரும் 16 ஆவது உலகக் கோப்பை உதைபந்தாட்டப்போட்டித்தொடரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஆட்டத்தில் தற்போதைய உலகச்சம்பியனான பிறேசில் அணி நோர்வே அணியிடம் 2—1 என்ற கோல் கணக்கில் தோல்விகண்டது

ஆட்டம் தொடங்கி அரைவாசி நேரம் வரை எந்த அணியும் கோல் போடாத நிலை நீடித்தது. எனினும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் பிறேசில் முதலில் ஒரு கோல் போட்டது. தொடர்ந்து சற்று நேரத்தின் பின் நோர்வே அணியும் ஒரு கோல் போட்டு ஆட்டத்தினை சமநிலைக்குக் கொண்டு வந்தது.

ஆனால் ஆட்டத்தின் இறுதி நேரம் நெருங்கும் போது பிறேசில் அணி வீரரொருவர் தமது 'பனால்ட்டி' எல்லைக்குள் வைத்து நோர்வே வீரரிடம் இருந்து விதி முறைக்கு மாறாக பந்தைப் பறிக்க முற்பட்டதனால் நோர்வே அணிக்கு 'பனால்ட்டி' முறையில் கோல் அடிக்கும் வாய்ப்புக் கிட்டியது, கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன் படுத்திக்கொண்ட நோர்வே அணியினர் தமது இரண்டாவது கோலைப்போட்டு வெற்றியைத் தமதாக்கிக் கொண்டனர்.

இப்போட்டித் தொடரில் பிறேசில் அணி ஏற்கனவே விளையாடிய இரு ஆட்டங்களிலும் வெற்றி பெற்றதனால் கால் இறுதி ஆட்டத்துக்குச் செல்லும் தகுதியைப் பெற்றுள்ளது. (ஐ-6)

## பலத்த பாதுகாப்புடன் நடந்த ஆட்டம்!

பாரிஸ், ஜூன் 25

அமெரிக்கா, ஈரான் அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை பிரான்ஸ் அரசு செய்திருந்தது.

இந்த ஆட்டத்தில் ஈரான் அணி வெற்றியீட்டியது தெரிந்ததே. அச்சம் காரணமாக அரசு உஷார் நடவடிக்கைகளை எடுத்திருந்தாலும் ஈரான்-அமெரிக்க ரசிகர்கள் அரசியல் வேற்றுமைகளை மறந்து ஒருவருடன் ஒருவர் ஆரவாரமாக இணைந்து கொண்டனர்.

ஆட்டம் நடைபெற்ற லியானில் ரொனி நதி பாலத்தில் அமெரிக்க-ஈரான் நாட்டுக்கொடிகள் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்த காட்சி பரவச மூட்டுவதாக இருந்தது. (ஐ-10)

## தாமரைக்கனி கைது

சென்னை, ஜூன் 27

அ. தி. மு. க சட்டப் பேரவை உறுப்பினர் ஆர். தாமரைக்கனியும் அவரது ஆதரவாளர்கள் 20 பேரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அண்மையில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் இவர்கள் நடத்திய பேரணி மீதுதாக்குதல் நடத்தப்பட்டதை தடுத்து நேற்று முன்தினம் மதுரை பேருந்து நிலையத்தில் மறியல் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. இதனை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை பத்ராயிரத்து பேருந்து நிலையத்தில் மறியல் போராட்டம் செய்ய முயன்ற அ. தி. மு. க உறுப்பினர் 9 பேர் கைதாகியும் தொண்டர்கள் 39 பேர் தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

(இ-ரி)

## ஆபிரிக்காவில் எய்ட்ஸ் தீவிரம்!

நியூயோர்க், ஜூன் 25

ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் எய்ட்ஸ் மற்றும் எச். ஐ. வி. தீவிரமாகப் பரவி வருவதாக ஐக்கிய நாடுகள் சபை விடுத்துள்ள பிந்திய அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நோய் பரவும் வேகம் மற்றும் இதன் மூலம் ஏற்படும் மரணங்கள் வளரும் நாடுகளில் — குறிப்பாக ஆபிரிக்காவின் சில பகுதிகளில் — அபாயகரமான அளவை எட்டியிருப்பதாக அந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

எச். ஐ, வி. மற்றும் எய்ட்ஸ் தொற்றிய 3 கோடி பேர் இந்நாடுகளில் உள்ளனர். இவர்களில் மூன்றில் இரு பங்கினர் சகாரா பாலைவனத்துக்கு கீழே உள்ள ஆபிரிக்க நாடுகளிலேயே காணப்படுகின்றனர்.

ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் பெரும் பகுதியிலும் எய்ட்ஸ் தீவிரமாகப் பரவி வருவதாக அந்த அறிக்கை எச்சரித்துள்ளது. (ஐ)

## கசப்பான அனுபவங்களை பின் தள்ளி விடுவோம்

### ஷெரீப்பிடம் வாஜ்பாய் தகவல்

புதுடில்லி, ஜூன் 25

20 ஆம் நூற்றாண்டின் கசப்பான அனுபவங்களையும், காழ்ப்புணர்வுகளையும் பின் தள்ளிவிட்டு சுதந்திரம், சமாதானம் பரஸ்பர நல்லுறவை 21 ஆம் நூற்றாண்டிற்காக இப்போதே தொடங்குவோம்.

இவ்வாறு இந்தியப்பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய் பாகிஸ்தான் ஜனாதிபதி நவாஸ் ஷெரீப்புக்கு தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்த வேண்டாம். அவற்றை நாமே தீர்த்துக் கொள்வோம். மேற்குலக நாடுகள் எமது நாடுகளுக்கு செய்த அநீதிகளை மறக்கவில்லை, மறக்கவும் முடியாது என்றும் வாஜ்பாய் தெரிவித்தார்.

(இ-ரீ)

## சனி மாற்றத்தை ஒட்டி

# சனீஸ்வரன் ஆலயத்தில் 5 லட்சம் பக்தர்கள்

இந்தியாவின் காரைக்கால் திருநள்ளாறு ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஆலயத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற விசேட பூஜை ஆராதனைகளில் 5 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற சனி மாற்றத்தை ஒட்டி இந்த பூஜை வழிபாடு நடைபெற்றது.

சனி பகவான் மீன ராசியில் இருந்து மேட ராசிக்கு மாற்றமடையும் இந் நிகழ்வு இரண்டரை ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்கிறது.

நளமகாராஜா குளத்தில் புனித நீராடிய இத்தினத்தில் சனிபகவானை வழிபடுவதனால் சனியின் தீமைகளில் இருந்து விடுபட முடியும் என இந்த பக்தர்கள் நம்புகின்றனர். (ஐ-[illegible])



அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வை ஆட்சேபித்து இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நாடாளுமன்ற வளாகத்துக்கு வெளியே சுமார் 500 முஸ்லிம் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவி ஒருத்தி தேசியக் கொடியைத் தாங்கியவாறு நிற்பதைக் காணலாம். பின்னால் ஆயுதமேந்திய படையினர் காணப்படுகின்றனர். (ஐ)

# கணனிகள் விற்க கட்டுப்பாடு!

வாஷிங்டன், ஜூன் 25

அதி சக்திவாய்ந்த கணனிகளை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்தப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. எனினும் தனியார் நிறுவனங்களுக்கு இத்தகைய கணனிகளை விற்கும் அமெரிக்க நிறுவனங்கள் இதன் மூலம் கட்டுப்படுத்தப்படமாட்டா எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணுசக்தி, மற்றும் ஏவுகணைத்திட்டங்களை திட்டமிடும் அதிநவீன கணனிகள் ஏற்றுமதி செய்யப்படுவது இதன் மூலம் தடுக்கப்படும் என்று அமெரிக்க வர்த்தக அமைச்சின் ஏற்றுமதி நிர்வாகம் தெரிவித்தது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## உடன் விற்பனை

அழகிய ஜே. சி இனம் கறவைப் பசு கன்று ஈன்று 10 நாள்கள். உடன் விற்பனைக்கு உண்டு. சந்திரன், 200/2, கண்டி வீதி, அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை முன்பாக.

(57102)

## சோதிடம்

வானசாஸ்திரம், கணிதம் அடிப்படையில் மதசார்பற்ற விஞ்ஞான ரீதியிலான சகல மதத்தினருக்கும் ஏற்ற சோதிடக் கல்வி ஞாயிறு காலை வகுப்புக்கள். உடன் தொடர்பு கொள்க S. C. இம்மானுவேல் பொறியியலாளர் 41/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (57062)

## இலகு திருமண சேவை

வயது 37 அச்சுவினி இலங்கை (B. Sc.) கனடாவில் T/O வேலை புரிபவருக்கு மணப்பெண் தேவை. மணமகன் யாழ். உள்ளூர். தொடர்பு: ஞாயிறு காலை துரைவிமலா 958/8, K K S. வீதி, யாழ். நாச்சிமார் கோயிலடி.

(57073)

## கணிதம்Cக்கு உத்தரவாதம்

உங்கள் வீடுகளுக்கு வந்து ஆண்டு 4 இலிருந்து O/L 98 வரை அடிப்படையில் இருந்து Paper வரை மிகத் துல்லியமாக கணிதம் கற்பிக்கப்படும். விரிவுரை: K. E. சங்கர், 501A, மொகமடீன் பள்ளி வீதி, ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். ஒரு வகுப்பிற்கு 50 ரூபா,

(57101)

## மணமகள் தேவை

1954 ஆம் ஆண்டு பிறந்து ஜேர்மனியில் சொந்தமாகத் தொழில் நடத்துபவருக்கு ஏற்ற மணப்பெண் தேவை. இங்கு வந்து திருமணம் செய்வார். மாற்று திருமணமும் விரும்பப்படும். என்ஜினியர், டாக்டர், பட்டதாரிகளும் உண்டு. 39, K. K. S. வீதி, கொக்குவில்.

(57060)

## ஆங்கிலம் விசேடமாக

O/L இல் Distinction, Credit பெறுபேறடைய G A. Q, N. C. G. E. (Spoken English உட்பட) கற்பிக்கப்படும். B Sc. ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (57082)

## காணி விற்பனைக்கு

சுழிபுரம் காளுவன் சந்தியில் இருந்து 300m தூரத்தில் பயன் தரும் மரங்களுடன் 5 பரப்புக்காணியும், சுழிபுரம் வறுத்தோலையில் நெற்காணி 10 பரப்பும், 70 பனைகள் அடங்கிய 12 பரப்பு பனங்காணியும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N. K. குகநேசன், அரச வீதி, உரும்பிராய்.

[57105]

## தவற விடப்பட்டது

லோகேஸ்வரன் கலாநிதி ஆகிய எனது தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும் 666492420V எனும் இலக்கமுடைய இரு அடையாள அட்டையும் யாழ்ப்பாணத்திற்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் பஸ்ஸில் தவறவிடப்பட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் சந்தியில் உள்ள சிவா பிறதர்ஸ் கடையில் ஒப்படைக்குமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (57084)

---

# அச்சுவேலி மகாவித்தியாலய

### பழைய மாணவர் சங்கப்

## பொதுக்கூட்டம்

புதிய அதிபர்

**திருமதி ச. கனகராசா B. A.**

அவர்களின் வரவேற்பு உபசாரமும் அதனையடுத்து பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் **28 - 06 - 98** ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு மகாவித்தியாலய மண்டபத்தில் எஸ். சந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பழைய மாணவர்கள் அனைவரும் சமுகந்தரும்படி கேட்கப்படுகின்றார்கள்.

(57106)

- செயலாளர்

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

### க. பொ. த. (சா/தா) பரீட்சை - 1997

| | |
|---|---|
| அ. அனுராதா | 8டி |
| இ. யுரேகா | 7டி, சீ |
| ந. சிவதர்சினி | 4டி, 3சீ, எஸ் |
| க. ராதிகா | 4டி, 3சீ |
| செ. பவானி | 3டி, 4சீ, எஸ் |
| சி. நிசாந்தி | 3டி, 4சீ, எஸ் |
| த. நிருசனா | 3டி, 4சீ, எஸ் |
| செ. சங்கீதா | 3டி, 4சீ |
| பு. ஷாளினி | 3டி, 3சீ, 2எஸ் |
| க. விஜிதா | 3டி, 3சீ, எஸ் |
| தி. பிரசாந்தி | 3டி, 2சீ, 2எஸ் |
| ச. உசிதா | 2டி, 6சீ |
| மா. பிரியங்காசாளினி | 2டி, 5சீ |
| கி. துவாரகா | 2டி, 5சீ |
| த. நிந்துஜா | 2டி, 5சீ |
| இ. கார்த்திகா | 2டி, 4சீ, எஸ் |
| பூ. சுபோகினி | 2டி, 4சீ, எஸ் |
| பொ. விஜிதா | 2டி, 4சீ, எஸ் |
| த. சசிரேகா | 2டி, 4சீ, எஸ் |
| ம. மேகலா | 2டி, 4சீ, எஸ் |
| இ. பாமிலா | 2டி, 4சீ, |
| மா. அனுசூயா | 2டி, 3சீ, 2எஸ் |
| யோ. கார்த்திகா | 2டி, 2சீ, 3எஸ் |
| க. சிவாஜினி | 2டி, சீ, 4எஸ் |
| சு. சுதமதி | டி, 4சீ, 3எஸ் |
| பு. பாமா | டி, 4சீ, 2எஸ் |
| த. யசோதா | டி, 4சீ, எஸ் |
| சி. பவானி | டி, 3சீ, 3எஸ் |
| த. யாழினி | டி, 3சீ, 3எஸ் |
| இ. ஜெயவாணி | டி, 2சீ, 3எஸ் |

க. பொ. த. (உ/த) தகுதி பெற்றோர் 48 பேர் (60%). மேற்படி மாணவர்களையும் அவர்களின் உயர்விற்கு வழிகாட்டி ஊக்குவித்த அதிபர், ஆசிரியர், பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

(57103)

---

# 45 ஆம் நாள் அஞ்சலி



எடுத்தவர் கொடுத்தது

**03-07-1982**

கொடுத்தவர் எடுத்தது

**12-05-1998**

செல்வி

## நிர்மலா திருநேசராசா

அன்பு நிர்மலா, அருமைக் குழந்தாய்,
தொண்ணூற்றைந்திலே தொடங்கிய ஓட்டம்
தென்மராட்சி — வன்னி — என்று போய்
வவுனியா இந்துவில் உன்னை இருத்தின.
கல்வி வானிலே பறந்த குருவியே
யாரோ, எதற்கோ வைத்த கண்ணியா
உனக்கொரு முடிவைக் கொண்டு வந்தது?
நிர்மலா, உன்னை நாம் மறவோம்!
நீங்காதெங்கள் நெஞ்சில் நிரம்பினாய்!

அப்பா அம்மா தங்கை.

அச்செழு, நீர்வேலி.
கோவில்குளம், வவுனியா.

(57099)

---

# போதிய தண்ணீர் இன்றி நோயாளிகள் அவதி

வடமராட்சி, ஜூன் 25

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் தண்ணீர் விநியோகம் சீரின்மையால் நோயாளர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர்.

தண்ணீர் விநியோகத்துக்கென ஏற்கனவே உள்ள ஒரு கிணற்றுடன், போருட் நிறுவன உதவியுடன் மேலும் இரு குழாய்க்கிணறுகள் தோண்டப்பட்டிருந்தன.

ஆயினும் மட்டுப்படுத்தப்பட்ட தண்ணீர் விநியோகம் மட்டுமே நடைபெறுவதால் தண்ணீர் விநியோகிக்கப்படும் நேரம் அல்லாத நேரங்களில் மலசல கூடங்களுக்கு இயற்கைக் கடன் கழிக்கச் செல்லும் நோயாளர்கள் நீரின்றி கஷ்டமடைந்து வருகின்றனர். (இ-173)

---

# கொக்குவில்

## புனித சின்னப்பர் ஆலயத் திருவிழா

அருள்மிகு புனித சின்னப்பர் ஆலய (கொக்குவில்) திருவிழாத் திருப்பலி எதிர்வரும் ஞாயிறு **28-06-98** காலை 7-30 மணிக்கு இடம்பெறும்.

இதற்கான ஆயத்த வழிபாடுகள் மாலை 5-00 மணிக்கு நடைபெறும்.

25-06-98 ''ஆவிக்குள் வாழ அழைப்பு''
★ கலா. 5;13 — 26
★ லூக். 3:21, 22 — 4:16 — 22

26-06-98 ''ஆறுதல் தரும் ஆவியானவர்''
★ 2 கொரி. 4;7 — 12
★ மாற்கு 14:32 — 47

27-06-98 ''ஒன்றிணைக்கும் ஆவியானவர்''
★ அப். பணி 4:32 — 35
★ அருளப்பர் 17:11 —15

திருநாள் திருப்பலி
''ஆவியில் வாழ்ந்த தியாகி''
★ அப். பணி 9:1 — 19
★ 2 திமோத். 4:6 — 8, 17 — 18
★ மத். 16:13 — 19

இயேசுவின் இனிய நாமத்தை எல்லா மக்களுக்கும் எடுத்துச் சென்று சாட்சியம் பகர்ந்த உன்னதராம் புனித சின்னப்பரின் ஆசிபெற அனைவரையும் அழைத்து நிற்கின்றோம்!

பணி. இரா. சூசைநாதனும்
ஆலயக் குழுமமும்,
கொக்குவில்.

(57107)

---

# சங்கானை

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வ. உ]

இலிகிதர் 302/11

## பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

சம்பளத் திட்டம்:

2950 — 4700
75 X 10 — 100 X 10

தகைமைகள்:

அ) கூட்டுறவுப் பணியாளர் 12 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் / இலிகிதர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 13 ஆவது சம்பளத் திட்டத்தில் நான்கு வருடத்திற்கு குறையாத அனுபவம்,

அல்லது

ஆ) ஐக்கிய இராட்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடை நிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்குத்துறை சார்ந்த பதவியில் நாலு வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

அல்லது

இ) கூட்டுறவு உயர் தராதரப் பத்திரம்/ க. பொ. த. (உயர்தரத்தில்) 3 பாடங்களில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

வயதெல்லை:- 21 - 40 வரை

(கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தமது சங்கத்தினூடாகவே விண்ணப்பத்தினை அனுப்புதல்வேண்டும். இத்தகைய ஊழியர்கள்நேரடியாகவிண்ணப்பங்கள் அனுப்புதல், விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லா தொழிப்பதற்கும் வழி வகுக்கும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 06 - 07 - 98 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக் கூடியதாக ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.

23 - 06 - 1998

(சி-4104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 சதவீதமான நகரச் சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் சிறுவர்களில் 50 சதவீதமான சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டு இருப்பதாக மருத்துவத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தொழில் இல்லாத பெற்றோர்கள் உழைப்பாளியை இழந்த குடும்பங்களிலுள்ள சிறுவர்களே பெரிதும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். நகரத்தின் உட்கட்டுமாணம் சிதைவடைந்துள்ளதால் வசதியீனங்களின் மத்தியிலே இந்தச் சிறுவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மலசலகூடம் மற்றும் அடிப்படை வசதிகளற்ற நிலையில் உடைந்த வீடுகளில் வதியும் இவர்கள் நுளம்புத் தொல்லையினால் அடிக்கடி நோயாளிகளாகின்றனர்.

யாழ். நகரப் பகுதியில் சுமார் ஒருலட்சம் மக்கள் தற்போது வசித்து வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## அங்கிலிக்கன் திருச்சபை குழுவினருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணம் வருகை தந்த அங்கிலிக்கன் திருச்சபையின் சர்வதேச சமாதானத்திற்கும் நீதிக்குமான அமைப்பினர் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய பிரதிநிதிகள், மக்கள் சக்தி கழகம், சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு போன்றவற்றைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்துடன் நடத்திய சந்திப்பில் யாழ். மாவட்டத்தில் கல்வி நிலை, அபிவிருத்தித் திட்டங்கள், மனித உரிமை மீறல்கள், புனர்வாழ்வு புனரமைப்பு வேலைகள், யுத்தத்தின் போது சேதமாக்கப்பட்ட மத நிறுவனங்களின் புனரமைப்பு, யாழ். மாவட்ட மருத்துவநிலைவரம், மற்றும் பொதுவான சூழ் நிலைகள் பற்றி விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவுடனான சந்திப்புயாழ். ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை, நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்தபரமாச்சாரிய சுவாமிகள், குழுவின் இணைச் செயலாளர்கள் சு. பரமநாதன், எஸ். செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மக்கள் சக்தி கழகத்தின் சார்பில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம், செயலாளர் எஸ். மயில்வாகனம் உட்பட ஏழு பேர் கலந்து கொண்டனர்.

நேற்று முன்தினம் யாழ். வந்து சேர்ந்த இவர்கள் நேற்று மாலையே கொழும்பு திரும்பினார்கள்.

(இ-5)

## கொல்களம் நிறுவப்பட்டபின் இறைச்சி விற்பனையில் நிலவியசீர்கேடுகள் நீங்கின

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு பிரதேசங்களில் இதுவரை காலமும் நடைபெற்று வந்த சட்டவிரோதமாக கால் நடைகள் வெட்டுவதும் கட்டுப்பாடற்ற சுகாதாரமற்ற முறையில் இறைச்சி விற்பனை செய்வதும் ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன.

சுன்னாகம் பிரதேச சபை தலைவர் தி. மா. செல்வராசாவின் ஏற்பாட்டில், சுன்னாகம் பிரதேசசபைக்குட்பட்ட கொத்தியாலடி கொல்களம், இறைச்சிக்கான மாடுகள் வெட்டும் களமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக இப்பகுதியின் பல்வேறு இடங்களிலும் கண்டபடி கால் நடைகள் வெட்டப்பட்டு இறைச்சி விற்பனை செய்யப்படடுவந்தது.

இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் சுன்னாகம் சந்தைப் பகுதியில் (பழைய மரக்கறி விற்பனை நிலையப் பகுதி) 24 மணித்தியாலங்கள் கட்டப்பட்டு பரிசோதனைகளின் பின் கொத்தியாலடி கொல்களத்தில் வைத்து வெட்டப்பட வேண்டும் எனவும்—

இறைச்சி சுகாதார பரிசோதகரின் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை மீறி கண்ட இடங்களில் கால்நடைகளை வெட்டுவதும் அனுமதி இன்றி இறைச்சியை விற்பனை செய்வதும் கண்டுபிடிக்கப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-152)

## கேலங்காமம்குளம் விரைவில் திருத்தப்படும்

வலிகாமம், தெற்கு ஜூன் 25

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கேலங்காமம் குளத்தின் திருத்த வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

திருத்தவேலைக்கென மேற்படி செயலக பிரமாணஅடிப்படையிலான பன்முகப்படுத்தப்பட்டநிதியின் கீழ்இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கேலங்காமம் குளத்துள் அமைந்துள்ள மூன்று துருசுகளைஉடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட 'ஷெல்' வீச்சுக்களினால் இத்துருசுகள் பலத்த சேதமடைந்து பாதிக்கப்பட்டுள்ளன.

மானிப்பாய் வடக்கு விவசாயசம்மேளனத்தின் கோரிக்கையை அடுத்து இத்துருசுகள் திருத்தப்பட உள்ளன.

மேற்படி குளத்தையும் துருசுகளையும் சம்மேளனத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களுடன் சிரேஷ்ட தொழில் நுட்ப அதிகாரி க. ஆனந்தராசா நேரில் சென்று பார்வையிட்டு திருத்தவேலைகளுக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

(இ-152)

## ச.ச. நிலையத்துக்கு நிதி ஒதுக்கீடு

சண்டிலிப்பாய், ஜூன் 25

பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலைய பாலர் பாடசாலை கட்டடத்திற்கு இவ்வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 65 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை சண்டிலிப்பாய் வடக்கு ஆலங்குழாய் சனசமூக நிலைய புனரமைப்பு வேலைகளுக்காக இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிவதாசன் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

(ஐ-135)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 25

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ச. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்ப்பாணம் வலயம் 2 இன் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகவும், கரவெட்டிக் கோட்டப் பிரதிக்கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா சிறப்பு விருந்தினராகவும், கரவெட்டிக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் வி. அருளானந்தம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

(ஐ-8-173)

## வண்டிச் சவாரி

வலிகாமம் தெற்கு, ஜூன்25

கந்தரோடையில் அமைந்துள்ள மாட்டுவண்டிச் சவாரி நடைபெறும் மைதானம் திருத்தியமைக்கப்படவுள்ளது.

மேற்படி மைதானத்தில் மாட்டுவண்டிச்சவாரிப் போட்டியொன்றை நடத்த வண்டிச்சவாரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. மேற்படி வண்டிச்சவாரி ஜூலை மாதம் 12 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

(ஐ-152)

## விதை உ.கிழங்கிற்கு முற்பணம் சேகரிப்பு

உருளைக்கிழங்குச் செய்கையாளர்களுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்குகள் கமநல சேவைக் கேந்திர நிலையங்களூடாகப் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் விதை உருளைக் கிழங்குகள் கப்பல் மூலம் தருவித்து வழங்குவதற்கேற்ற ஒழுங்குகளை கமநலக் கேந்திர நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

ஒரு பெட்டி விதை உருளைக் கிழங்கிற்கு மூவாயிரம் ரூபா வீதம் விவசாயிகள் தமக்குத் தேவையான பெட்டிகளுக்குரிய பணத்தை முற்பணமாக இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன் செலுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஐ- 152)

## மானிப்பாய், உடுவிலில் மின் உருகிகளில் மோசடி கண்டுபிடிப்பு!

மானிப்பாய், உடுவில் பகுதிகளில் மின் உருகிகளில் (பியூஸ்) மோசடி செய்து கூடிய அளவில் மின்சார பாவனையைப்பெற்றுவந்த பலருடைய மின்சார இணைப்பை மின்சார சபையினர் துண்டித்துள்ளனர்.

மானிப்பாயில் உள்ள மின் பிறப்பாக்கி மூலம் வழங்கப்பட்டுவரும் மின்சாரத்திலேயே இம் மோசடிகள் செய்யப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

மின்சார பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு வீடுகளுக்கும் வழங்கப்படும் மின்சாரத்துக்கான குறைந்தளவு மின் உருகிகள் மின்சார கம்பங்களில் பொருத்தப்பட்டிருந்தன.

பல வீட்டுச் சொந்தக்காரர்கள் சட்ட விரோதமாக மின்கம்பங்களில் ஏறி வலுகூடிய மின் உருகிகளை மாற்றிப் பொருத்தி அதிகளவு மின்சாரத்தைப் பெற்று வந்தனர்.

மின்சார சபை ஊழியர்கள் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனைகளின் போது, மானிப்பாய், உடுவில் பகுதிகளில் இவ்வாறு 21 மின் உருகிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு மோசடி செய்த வீட்டுப் பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மின்சார இணைப்பை மின்சார சபையினர் உடனடியாகத் துண்டித்துள்ளனர்.

சில இடங்களில் கள்ளமாக மின்சாரம் பெற்று வந்தவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-152)

## பனை அபிவிருத்திச் சபை பனை விதை கொள்வனவு

யாழ்ப்பாணம், ஜூன் 25

பனை அபிவிருத்திச் சபை பனை விதைகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

யாழ். மாவட்டத்தில் பனை விதைகள் நடுகை செய்வதற்குரிய காலம் நெருங்குவதால் பனை விதைகளை ஒன்று 50 சதப்படி கொள்வனவு செய்ய உள்ளதாக அதன் பொது முகாமையாளர் க. கோகுலதாஸன் தெரிவித்தார்.

பனை விதைகளை விற்பனை செய்ய விரும்புபவர்களிடமிருந்து பனை விதைகளைக் கொள்வனவு செய்து பனை விதை நடுகை செய்ய விரும்புபவர்களுக்கு அவற்றை இலவசமாக வழங்குவதற்கு முயற்சி எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

குடா நாட்டில் கடந்த காலப் போர் அனர்த்தங்களினால் அதிக எண்ணிக்கையான பனைகள் அழிக்கப்பட்டு விட்டன. அதே சமயம் பனைகளின் பாவனை அதிகரித்துக் காணப்படுகிறது. எனவே அதிகளவு பனை விதைகளை இம்முறை நடுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்— என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

# செய்திக் கொத்து

### ஆரம்ப கல்விக் கண்காட்சி

சண்டிலிப்பாய், ஜூன் 25

சண்டிலிப்பாய்க் கல்விக் கோட்டப் பிரிவில் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஐந்து வரை வகுப்புகளுக்கான ஆரம்ப கல்விக் கண்காட்சி அண்மையில் பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் த. க. பாடசாலையிலும், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் நடத்தப்பட்டது.

இளவாலை, மாதகல், பண்டத்தரிப்பு, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளுக்கான கண்காட்சி பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் த. க. பாடசாலையிலும், நவாலி, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கான கண்காட்சி மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றிலும் நடைபெற்றன.

(ஐ-135)

### பாலர் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 25

ஆவரங்கால் மத்தியபாலர் பாடசாலையின் 23 ஆவது வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் கடந்த வாரம் கா. சிவசோதி தலைமையில் நடைபெற்றன.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா பிரதம விருந்தினராகவும், உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ. தவநாயகம் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(ஐ-7)

### தையற் போட்டி

சண்டிலிப்பாய், ஜூன் 25

சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட மட்டத்தில் தையல், மனைப்பொருளியல் போட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)

### பணிமனை இடமாற்றம்

மானிப்பாய் பிரதான வீதியில் இயங்கி வந்த மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் பணிமனை மானிப்பாய்— உடுவில் வீதியில் றோஸ்பிரான்ட ரொபித் தொழிற்சாலைக்கு முன்பாகவுள்ள கட்டடத்திற்கு கடந்த வாரம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(ஐ-135)

### லயன்ஸ் உறுப்பினர் பதவியேற்பு

தென்மராட்சி, ஜூன் 25

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் 1998 — 99 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகிகள் பதவியேற்பு வைபவம் கடந்த வாரம் கழக அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

கழகத்தின் தலைவராக லயன் டாக்டர் டி. வீ. தம்பித்துரையும், செயலாளராக லயன் அ. பொ. செல்லையாவும், பொருளாளராக லயன் வீ. வீ. மகாலிங்கமும் பதவியேற்றனர்.

இவ் வைபவத்திற்கு லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் லயன் வீ. தில்லைநாதன் முதன்மை விருந்தினராகவும், மாவட்டத்திலுள்ள ஏனைய லயன்ஸ் கழகங்களின் பிரதிநிதிகள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மீனவரின் 36 படகுகள்

# நாகபட்டினத்தில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
தமிழ்நாடு நாகபட்டினம் கரையில் நீண்ட காலமாக திருகோணமலை மீனவர்களுக்குச் சொந்தமான 36 படகுகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

முன்னர் திருகோணமலையில் இடம்பெற்ற ராணுவ நடவடிக்கைகளால் இப்பகுதியிலுள்ள மீனவர்கள் தமது படகுகளில் இந்தியாவுக்கு தப்பிச் சென்றனர்.

இந்தியக்கரையில் வைத்து இவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் இவர்கள் அனைவரும் அங்குள்ள அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இவர்கள் தமது சொந்த இடங்களுக்கு திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ள போதிலும் இவர்களின் படகுகள் இன்னும் கையளிக்கப்படவில்லை.

பல லட்சம் ரூபா பெறுமதியான இப்படகுகள் நாகபட்டினம் கரையில் எவ்வித பராமரிப்புமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக இம்மீனவர்கள் இலங்கை, இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போதும் இதுவரையும் படகுகள் கையளிக்கப்படவில்லை. (ஐ-5)

## விவசாய அறிவு குறுவினாப் போட்டி

யாழ்ப்பாணம் கல்விவலயம் இரண்டைச் சேர்ந்த எட்டு கல்விக் கோட்டங்களிலும் இம்மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு விவசாய அறிவுக் குறுவினாப் போட்டி நடைபெற உள்ளது.

போட்டி நடைபெறும் கோட்டங்களும் இடங்களும் பின்வருமாறு:

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானைக் கோட்டங்கள், — மானிப்பாய் இந்துக் கல்லூரி.

கோப்பாய், உடுவில் கோட்டங்கள் — மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

கரவெட்டி, பருத்தித்துறைக்கோட்டங்கள் —நெல்லியடி ம.ம வித்தியாலயம்.

மருதங்கேணி கோட்டம்— அம்பன் அ.மி.த.க பாடசாலை, செம்பியன் பற்று அ.த.க பாடசாலை,

போட்டியில் பங்குகொள்ளும் மாணவர்கள் தமக்குரிய நிலைய பாடசாலைகளுக்கு குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-152)


## நியூ ஸ்ரீதேவி சலூன்

பலாலி வீதி, ஆலடிச்சந்தி,
கந்தர்மடம்.

25 - 06 - 1998 இன்று 15 ஆவது
ஆண்டு நிறைவைக் கொண்டாடும்
நியூ ஸ்ரீதேவி சலூனில்

புதிய நடைமுறையில் ஆண்கள், பெண்கள், முடி சுருட்டுதல், தலைமஜாஜ் டை பூசுதல், கீற்றர் பிடித்தல், சம்போக் கட்டிங் மற்றும் ஆண்களுக்கு ஸ்பெசல் சேவ் செய்யப்படும் என்பதை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

- நிர்வாகிகள்

(57081)


## ஆண்டு விழா

வடமராட்சி, ஜூன் 25
புலோலி கிழக்கு ஞான சம்பந்தர் கலை மன்றத்தின் 36ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும் நிலைய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றன. இவ்விழாவில் சங்கீதகலா வித்தகி திருமதி சரஸ்வதி கோபாலசாமியின் இசைத்துறைச் சேவையைப் பாராட்டி, பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (ஐ-173)


## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

## மணவாளக் கோலம்

மேற்படி ஆலயத்தின் மணவாளக் கோலம்
26 - 06 - 98 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

| | | |
|---|---|---|
| காலை | 8. 30 மணி | சங்காபிஷேகம். |
| நண்பகல் | 12. 00 மணி | பூசை |
| பிற்பகல் | 4. 00 மணி | விசேட பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சலும், அம்பாள் வீதிவலம்வருதலும். |

விசேட மங்கள வாத்தியம் இடம் பெறும்.

[57100] - உபயகாரர்



உ

வடமராட்சி

அல்வாய் வடக்கு பெரியதம்பிரான் என
வழங்கும் ஞானசக்தி முருகப் பெருமானுக்கு
புனராவர்த்தன பிரதிஷ்டா பஞ்சகுண்ட பக்ஷ

## மஹா கும்பாபிஷேக பெருவிழா

காலம்:- 26 - 06 - 1998 வெள்ளிக்கிழமை
அதிகாலை 6-02 முதல் 7-15 வரை

பிரதிஷ்டாகுரு:- சிவாகம கிரியாதத்வநிதி
ராம் - கெங்காதரக்குருக்கள் (சாரதாபீடம்)
தலைமையில் நடைபெறும். அனைவரும் வருக; இறை அருள் பெறுக!

(57091) - தர்மகர்த்தாசபை


## நிரந்தர நியமனம்

வடமராட்சி, ஜூன் 25
மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பணியாற்றிவரும் சமயாசமய தொழிலாளர்களில் 7 பேருக்கு யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் பெற்றவர்களில் நால்வர் பெண்களாவர். (ஐ-173)


## வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை சமாதான நீதிவானாக
நியமனம் பெற்று, பிறந்த மண்ணுக்கும்
நாட்டுக்கும் பெருமை தேடித்தந்துள்ள

### உயர்திரு. அ. தற்பரானந்தன் J. P.

(கோட்டக் கல்வி அதிகாரி, உடுவில்)

அவர்களை நீடூழி காலம் வாழ்ந்து அவர் தம் தன்னலமற்ற சேவைகள் பல்லாண்டு காலம் தொடர வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
உடுவில் முருகமூர்த்தி
வித்தியாசாலை.

உடுவில், சுன்னாகம்.

(சி/4106)


## பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம், ஜூன் 25
தேசிய கல்வி நிறுவக 94 — 95 ஆம் ஆண்டுக்கான கல்வி டிப்ளோமா இறுதித் தேர்வு முடிவுகள் வெளியாகி உள்ளன.

இவற்றை யாழ். இந்துக் கல்லூரியில் பார்வையிடலாம் என வலயம் ஒன்று கல்விப் பணிப்பாளர் ந. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-ரீ)

## நிறுவுனர் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 25
கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலையின் நிறுவுனர் தினமும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் தி. கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா பிரதம விருந்தினராகவும், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நிறுவுனர் நினைவுரையை முன்னாள் கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் த. கணேசபிள்ளை மற்றும் யாழ். பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் வை. சிவனேசன் ஆகியோர் நிகழ்த்துவர்.

சிறப்பு நிகழ்ச்சியாக மாணவ, மாணவியர்கள் வழங்கும் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறும். பரிசில்களை உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சரஸ்வதி சிவலிங்கராசா வழங்குவார். (ஐ-7)


## 90 ஆம் நாள் நினைவலைகள்



| தாயின் மடியில் | காலனின் பிடியில் |
|---|---|
| 01 — 04 — 1979 | 28 — 03 — 1998 |

செல்வன்

### சிவனேசன் நிஷாந்தன்

கடுந்தவம் செய்து பெற்ற கற்பகமே நிஷாந்துக் குட்டி!

கருணைக் கடலே நீயின்றி ஏது நிம்மதி
கண்முன்னே மறைந்திடுமோ உன்னெழில் வதனம்?
கணப் பொழுதில் உனைக் கவர்ந்த காலனவன்
கடுகதியாய் உன் கணக்கை முடித்து விட்டான்!
கண்ணே நீ மீளாத்துயிலில் ஆழ்ந்து விட்டாய்!
கண்மணியே உன்கனவு மறையாது இம்மண்ணில்!

28 - 03 - 98 இல் சிவபதமடைந்த அன்பு மகனாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று 25 - 06 - 98 வியாழக்கிழமை காலை அமாவாசை 9. 23 பின்பு பிரதமை வளர்பிறையில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

துயருறும்:
அப்பா சிவனேசன்,
அம்மா யோகேஸ்வரி,
அண்ணா, அக்கா, தம்பி, அன்ரிமார்.
சித்திமார், மாமாமார், அப்பப்பா
உற்றார், உறவினர்கள்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு. (57054)



## 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவுகள்



### அமரர் ஆனந்தர் ஸ்ரீதரன்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08—05—1946 | 24—05—1998 |

எமது குடும்பத்தலைவர் ஆனந்தர் ஸ்ரீதரன் அவர்களின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றியோருக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் பலவிதமான உதவிகளைச் செய்தோருக்கும், ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று 25-6-1998 வியாழக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மகன், பெற்றோர்,
சகோதர சகோதரிகள்.

''ஆனந்தவாசம்'',
இணந்தாரி கோயிலடி,
இணுவில் கிழக்கு,
இணுவில். (57104)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அர்த்தமற்ற பேச்சு இது

அடுத்த ஆட்சிபீடம் ஏறப்போவது நாங்களே. எமது ஆட்சியிலேயே இன ஐக்கியம் உருவாகும். நாம் ஆட்சிக்கு வந்த பின்னரே நாட்டில் சமாதானமும் ஏற்படும் —

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கியதேசியக்கட்சியின் தொழிற்சங்கமான தேசிய ஊழியர் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

தென்னிலங்கையில் இப்போது தேர்தல் காற்று வீசத்தொடங்கி விட்டது. மாகாணசபைத் தேர்தல்; அது இல்லையேல் ஜனாதிபதித் தேர்தல் என்று செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன.

பிந்திய நிலைவரங்களின் படி மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைக்காது நடத்த வேண்டுமென்ற அலை ஆளும் கட்சிக்குள்ளும் எழுந்துள்ளது.

எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் தங்கள் கட்சிக்கு அதிக ஆதரவு இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி உணர்ந்துள்ளது; கண்டறிந்துள்ளது. இது தகைய ஒரு பின்னணியில் தமது கட்சி விரைவில் ஆட்சிபீடம் ஏறும் என்றுத் ரணில் விக்கிரமசிங்க நம்புவது பொருத்தமானதே.

தேர்தலுக்கு முன்னர் இன ஐக்கியம் ஏற்படும், சமாதானம் உண்டாகும்; இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வுகாணப்படும், என்று வெற்றி பெறும் சாத்தியமுள்ள தென்னிலங்கைக் கட்சி கூறுவது வழமையானது தான்!

ஆனால் ஆட்சிக்கட்டிலில் ஏறியதும் தேர்தலுக்கு முந்திய நிலைப்பாடு மாறி, வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்படுகின்றன. கடந்த 42 வருடங்களாக இந்தக் காட்சி இலங்கையின் அரசியல் மேடையில் எவ்வித மாற்றமுமின்றி அரங்கேறி வருகின்றது.

இப்போது ஆட்சி நடத்தும் சந்திரிகா அரசுகூட, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகண்டு சமாதானத்தை நிலை நாட்டி விடப் போவதாக கூறியே பதவிக்கு வந்தது. ஆனால் இப்போது அரசியல் தீர்வையும், சமாதானத்தையும் முற்றாக மறந்து இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணும் இலக்குஉடன் செயற்பட்டு வருகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியும் இந்த வகையான குத்துக்கரணத்துக்கு எந்த வகையிலும் பின்னின்றதில்லை. மிகப்பல தடவைகள் பெயரெடுத்த சாதனை அதற்கு உண்டு.

ஆகையால் ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் நாடிய பேச்சு எந்த வகையிலும் அர்த்தமற்றது. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் ரணிலின் வெடிப்புளுகை அவர்கள் கருத்தில் கொள்ள மாட்டார்கள்.

தென்னிலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் தேர்தலுக்கு முன்னரே இனப்பிரச்சினை குறித்து தமக்குள் கருத்தொற்றுமைக்கு வந்து செயற்படுத்த உறுதி பூண்டால் மட்டுமே, இன ஒற்றுமையும் சமாதானமும் உருவாக முடியும். இரண்டு கட்சிகளும் இது குறித்துச் சிந்திக்குமா?

# இளைஞர் சமுதாயத்தின் வரம்பு மீறிய போக்கை மாற்றும் பொறுப்பு தாய்மார்களுக்கே உண்டு

## பேராசிரியர் நந்தி கருத்து

யாழ்ப்பாணம், ஜூன் 25

இன்றைய இளைஞர் சமுதாயத்தின் வரம்பு மீறிய செயல்களை — மாற்றும் போக்கைதிருத்தும்பொறுப்பு பெண்கள் கையிலேயே உள்ளது. முக்கியமாக தாய்மார் கைகளிலேயே உள்ளது — என்று பேராசிரியர் சி. சிவஞானசுந்தரம் (நந்தி) தெரிவித்தார்.

திருநெல்வேலி பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா சேவை நிலையத்தில் ஈஸ்வரம்மா நினைவு விழா, சிறுவர் விழா அண்மையில் நடைபெற்றது அதில் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழி வாற்றியபோதே பேராசிரியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''சஞ்சீவி'' 09 – 06 – 98 இதழில அதிரடி அரங்கில் எங்கு போகிறது எமது சமூகம்? தடுத்து நிறுத்துவது யார்? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன. அந்தக் கேள்விகளைத் தமது பேச்சில் பிரஸ்தாபித்து அது குறித்து கருத்துத் தெரிவித்த பேராசிரியர் நந்தி கூறியதாவது.

சமீபத்தில் 'சஞ்சீவி' யில் வந்த செய்தி எமமைத் துக்கம் அடையவும், வெட்கம் அடையவும் செய்துள்ளது. தீவிரமாகச் சிந்தனை செய்ய வைத்துள்ளது. துரையப்பா விளையாட்டு மைதானத்தில் சமீபத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது இளைஞர்கள் சிறு மண் பார்சல்களைக் கூட்டத்தில் வீசியிருக்கிறார்கள். பெண்களை (தாய்மாரை, தங்கைமாரை, மனைவிமாரை, அக்காமாரை) நசித்திருக்கிறார்கள்.

பின்பு போகும் வழியில் வீடுகள் மேல் கற்கள் வீசிக் கண்ணாடிகளை உடைத்திருக்கிறார்கள்.

ஒரு சில மணிநேரம் ஊரடங்கை நீக்கியதை வைத்து இந்தத் தீச் செயல்கள் நடந்திருக்கின்றன.

இந்த நிலையில் இவர்கள் கைகளில் அதிகாரம் கிடைத்தால் பொது மக்களுக்கு என்ன ஆகுமோ என்ற பயம் படித்தவர், முதியோர், பெண்கள், நலிந்தோர் மத்தியில் உண்டு.

ஒழுக்கம் மீறி, மனிதாபிமானம் மீறி, சாதாரண புத்தி மீறி நடக்கும் ஒவ்வொரு இளைஞனும் ஒரு வீட்டில் இருந்தே புறப்படுகிறான். அங்கே ஒரு தாய், அக்கா, தங்கை, மைத்துனி இருக்கிறாள். அவன் அவளிலேயே தங்கியிருக்கிறான். சோறு போடுபவர் தாயே. இவனின் செய்கை இன்னொரு தாயை, சகோதரியை, மைத்துனியைப் பாதிக்கிறது என்பதை தாய் உணர வைக்க வேண்டும்.

ஆகவே மனித மேம்பாடுகளை சமூகத்தில் வளர்க்க மிகவும் தகுதியானவர்கள் பெண்களே — என்றார்.

அவர் மேலும் கூறியதாவது:–

பெண்ணுக்கு சாத்வீக, தாமஸ, ராஜச எனும் முக் குணங்கள் உண்டு.

சாத்வீக குணம் உள்ளவளாகவே ஒரு பெண் இருக்க வேண்டும்.

தாமஸ குணம் பெண்ணுக்கு வேண்டிய அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகியவற்றைச் சாரும்

ராஜச குணம்பெண்ணுக்கு ஒரளவு தான இருக்க வேண்டும். இது எப்போது பெண்ணின் லட்சணம் என்று கருதப்படுகிறதோ அன்று தான் பெண்மையின் அழிவின் ஆரம்பம் என்று பாபா கூறுகிறார்.

பெண் பலவீனமானவர் அல்லர். அவள் அன்பு, ஆன்மீகம், பொறுமை, பொறுப்பு, திடம் ஆகியவற்றை கொண்டவள். தாய்மை அவளுக்கே உரியது. ஆகவே அவள் இல்லத்தரசி. அரசி அரசியாகவே இருக்க வேண்டும்.

ஈஸ்வரம்மா தெய்வத்தின் தாய் இறைவனால் தாயாக தேர்ந்து எடுக்கப்பட்டவர். கோசலை, தேவகி, மாயா, மேரி என்ற தாய்மாருடன் சேர்ந்தவர். கிராமத்தில் ஏழைக்குடும்பத்தில் பிறந்த கல்வி அறிவில்லாதவர். ஆனால் தெய்வபக்தியில் அரசியாக விளங்கியவர்.

ஈஸ்வரம்மா தினம் சிறுவர் தினம் மட்டுமல்ல பெண்கள் தினம் கூட ஏனெனில் சிறுவர் இளைஞரை வளர்க்கும் பொறுப்பு தாய்மாரிடமே உண்டு.

உலகிலே ஒழுக்கம் குன்றி வருவது எல்லோருக்கும் வருத்தம் தரும் செய்தி. அதனால் மனித மேம்பாடுகளை பாடசாலை ஒன்றில் இருந்து வளர்க்கும் ஒரு முறையை நமது சத்திய சாயி ஸ்தாபனம் ஆரம்பித்துள்ளது. இது வரை ஆண்டு ஒன்று கற்பிக்கும் 287 ஆசிரியர்களுக்கு பயிற்சி கொடுத்துள்ளோம் — என்றார்.

(அ–ரி)

# அடியவர்களை இரட்சித்தருளும் அளந்தகோடி அற்புத அன்னை

யாழ். குடாநாட்டினைச் சூழவுள்ள தீவுகளிலே வரலாற்றுச் சிறப்பு மிக்கது நயினாதீவு. இலங்கையின் பிரசித்தி பெற்ற சக்தி வழிபாட்டுத் தலங்களில் இத்தீவில் அமைந்திருக்கின்ற ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் முதன்மையானது. இவ்வாலய வரலாற்றின் ஆரம்ப காலம் எது என்பது இன்றுவரை எந்தவொரு வரலாற்று ஆய்வாளர்களாலும் சரியாகக் கணிப்பிட்டுக் கூறப்படவில்லை.

இந்தியாவின் பிரபல தொல்பொருள், சிற்பசாத்திர வல்லுனர் நரசிம்மன் நயினாதீவுக்கு விஜயம் மேற்கொண்டபோது ஆலய கருவறையில் சுயம்பு மூர்த்தியாக அமர்ந்திருக்கின்ற அம்பிகையின் திருவுருவையும் அதன் பின்புறமாக பரந்து விரிந்திருக்கின்ற ஐந்துதலை நாக உருவினையும் நவீன விஞ்ஞான முறையிலே ஆய்வு செய்து அவை பல ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்டவை எனக் கூறியுள்ளார்.

இந்திரனாலே ஸ்தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற அறுபத்து நான்கு சக்திபீடங்களில் மணித்தீவின் புவனேஸ்வரி பீடம்; நயினாதீவில் அமைந்திருக்கும் நாகபூஷணி அம்பாள் ஆலயமே யென நம்பப்படுகின்றது.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையில் குறிப்பிடப்படும் ''மணிபல்லவத்தீவு'' எதுஎன்பதில்தொல் பொருள் வல்லுநர்களிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றன. இருந்தும் தமிழ் நாட்டின்பிரபல எழுத்தாளர் நா. பார்த்தசாரதி (மணிவண்ணன்) தனது புகழ் பெற்ற ''மணிபல்லவம்'' என்னும் நாவலை எழுதுவதற்கு முன் நயினாதீவுக்கு வந்து பல நாள்கள் தங்கி நின்று ஊர்ப்பெரியவர்களைச் சந்தித்து உரையாடிச் சென்றே அவர் அந் நாவலை எழுதினார் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

### நயினை நாகபூஷணி கொடியேற்றம் இன்று

### நாகவழிபாட்டின் நிலைக்களன்

அம்பிகையின் ஆலயத்திலே ஆதிப் பூசகராகப் பணியாற்றிய நயினா பட்டர் என்பவரது பெயர் கொண்டு நயினாதீவு என இத்தீவு அழைக்கப்பட்டது. தற்போது அது மருவி நயினாதீவு என அழைக்கப்படுகின்றது.

தொன்று தொட்டு இன்று வரை நாக வழிபாட்டின் நிலைக்களனாக விளங்குவது நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயமாகும். ஆதித்திராவிடநாக வழிபாடு மருவிய காலத்தில் சக்தி வழிபாடு நாகவழிபாட்டுடன் கலப்புற்றதனால் அம்பிகை நாகபூஷணி என நாமம்பூண்டுள்ளாள் என்பது ஆன்றோர் முடிவாகும். நாகபூஷணி என்னும் நாமத்துடன் இவ்வளவு சிறப்புப் பொருந்திய ஆலயம் இந்தியாவில் எந்த இடத்திலுமே இல்லையென்று அறிஞர் கி. வா. ஜெகநாதன் கூறியுள்ளார்.

மு. நா. நடராசா
(நயினை அறங்காவலர் சபைப் பொருளாளர்)

நாக பாம்புகளை மாலையாக அணிபவர்சிவன் ஆனால் சக்திஉபாசகரான அபிராமிப் பட்டர் தனது ''அபிராமி அந்தாதி'' என்கின்ற நூலில் ''சாதி நச்சுவாய் அகிமாலினி'' [கொடிய விஷம் பொருந்திய சர்ப்பங்களை மாலையாக அணிந்திருப்பவள்] எனக்குறிப்பிடுவதும் அருணகிரி நாதர் தனது திருப்புகழில் ''சந்ர சேகரி நாகபூஷணத்தி'' என்றும், ''ஆதி சக்திசா மாதேவி பார்வதி நீலி துத்தியார் நீண் நாகபூஷணி'' என்றும் குறிப்பிடுவதும் நயினாதீவில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நாகபூஷணிஅம்பாளையேஎன்பது ஆனறோர் கருத்தாகும்.

### ஸ்ரீ சக்கரபூசை சிறப்பு

இவ்வாலயத்தில் நடைபெறும் நித்ய நைமித்யங்கள் ஆகம விதி வழுவாது எதுவித தடங்கலும் இன்றிச்சிறப்பாக நடைபெறுவது அம்பிகையின் பேரருளேயாகும். தினமும் நான்கு காலப் பூஜையும், கிழமை தோறும் வெள்ளிக் கிழமை உற்சவமும், மாதம் தோறும் முழு நிலா அன்று ஸ்ரீசக்கரபூஜையும், சித்திரை வருடம், வைகாசி விசாகம், ஆனியில் பதினைந்துநாள்கள் மகோற்சவம், ஆடிப்பூரம், ஆவணிச்சதுர்த்திநவராத்திரி கந்தசஷ்டி, விநாயகர்கதை, திருவெம்பாவை, தைப்பொங்கல், தைப்பூசம், மகாசிவராத்திரி போன்ற தினங்களில் விசேட உற்சவங்களும் நடைபெற்றுவருகின்றன. நால்வர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

ஆனி - 12

வெள்ளிக்கிழமை

திதி: துதியை
முற்பகல் 08.30 வரை.
நட்சத்திரம்: புனர்பூசம்
காலை 6.39 வரை.
சுபநேரம் 05. 55 - 07.25
ராகுகாலம்: 10.25 - 11.55
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதயவாக்கு

பெருமை என்பது பட்டங்கள் உடைமை அல்ல. பட்டங்கள் பெறுவதற்குரிய தகுதி [illegible]

[illegible]

## சாயி சிந்தனை

அளவிட முடியாத ஆழங் கொண்ட சமுத்திரத்திலிருந்து கணக்கிடமுடியாத அலைகள் தோன்றுவதைக் காண்கிறீர்கள். பிரிந்து பிரிந்து காணப்படும் அலைகளிலும் நிறைந்திருப்பது கடலின் ஜலம் தான். அதே விதமாக மனிதனும் பல வகையான பெயரிலும், வடிவங்களிலும் காணப்பட்டாலும்; அவர்கள் தெய்வீகப் பெரு நெருப்பின் சிறு பொறிதான். சச்சிதானந்தப் பெருங்கடலிலிருந்து புறப்பட்ட அலைகள் தான். ஒவ்வொரு மனிதனும் அமிர்த வடிவமே! ஒவ்வொரு மனிதனும் பிரேமை மயமே! இருப்பினும் பிரேமை வடிவான மனிதன் தன்னிடமிருக்கும் பிரேமையை அடுத்தவரிடம் பகிர்ந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. காரணம் என்ன? அவர்களிடம் நிறைந்திருக்கும் சுயநலம், சுய இலாப நோக்கமும் தான். எப்போது மனிதனிடமிருந்து சுயநலம் முழுமையாக விலகுகிறதோ, அப்போது தான் அவனுள்ளிருக்கும் திவ்வியத்துவம் வெளித் தெரியும். ஒவ்வொரு மனிதனும் தெய்வ வடிவமே!

(ஆதாரம்: சனாதன சாரதி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தியடைந்தோருக்கு களுத்துறையில் பயிற்சி

யாழ். ஃபாதனா வைத்திய சாலையில் கடந்த ஜனவரி. பெப்ரவரி மாதங்களில் இடம் பெற்ற பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கான நேர் முகப் பரீட்சையில் சித்தி யெய்தியவர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான பயிற்சிகள் ஜூலை 1ஆம் திகதி களுத்துறையிலுள்ள பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் சுகாதார அமைச்சினால் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளன. (இ-5)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 25

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்துள்ள தூரிகை நுண்கலை வளாக மாணவர்களின் ஆக்கங்களுடன் கூடிய ''அரும்புகள்'' ஓவியக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை தூரிகை நிலையத்தில் நடைபெறும். (ஐ-ரீ)

# உளவியல், இந்துதத்துவம் பாடநெறி கலைப்பீட மாணவர்களுக்கு அறிமுகம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். பல்கலைக் கழக கலைப்பீட முதலாம் வருட மாணவர்களுக்கு உளவியல், இந்து தத்துவம் ஆகிய இரு புதிய பாட நெறிகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் இம்முறை புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட உள்ள முதலாம் ஆண்டு மாணவர்களுக்கே இந்த இரு பாடநெறிகளும் அறிமுகம் செய்யப்பட உள்ளன. புதிதாக பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் மாணவர்கள் தமது பாட நெறிகளைத் தெரிவு செய்யும்போது இந்த இரு பாடங்களையும் சேர்த்துத் தெரிவு செய்ய முடியும் என துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உதயனுக்குத் தெரிவித்தார்.

சிங்கள மாணவர்கள் தமது சமயத்தைக் கற்பதற்கு அவர்களுக்கு பௌத்த தத்துவம் என்ற பாட நெறி உள்ளது. ஆனால் தமிழ் மாணவர்கள் குறிப்பாக இந்து மாணவர்கள் தமது சமய தத்துவங்களைக் கற்பதற்கு இதுவரை எந்தக் கற்கை நெறியும் இல்லை. இவற்றைக் கருத்திற் கொண்டே இந்து தத்துவம் என்ற புதிய பாடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல கடந்த காலப் போர் அனர்த்தங்களினால் தமிழ் மாணவர்களும் பொது மக்களும் உள ரீதியாக கடுமையான தாக்கத்தை எதிர்நோக்கியுள்ளனர். எனவே அவர்களுக்கு உதவக்கூடிய நோக்கிலேயே உளவியல் என்ற புதிய பாடம் அறிமுகஞ் செய்யப்படுகின்றது. இந்தப் பாடநெறியைக் கற்கும் மாணவர்களால் சமூகத்திற்கு நன்மை ஏற்படும் என நம்புகின்றோம்.

இந்தப் பாடநெறிகளை அறிமுகஞ் செய்யுமாறு பல தடவைகள் பல தரப்பினரிடமிருந்தும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-9)

# ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை-1998

## நேர அட்டவணை (புதிய பாடத்திட்டம்)

| திகதி | முற்பகல் | பாடம் | பிற்பகல் | பாடம் |
|---|---|---|---|---|
| 03 - 08 - 1998 | 9.00-11.00<br>9.00-12.00 | விலங்கியல் I<br>பிரயோக கணிதம் I<br>வரலாறு I<br>பகுதி II (9-00—11-00)<br>பகுதி I (11-00—12-00) | 13.00-16.00 | மனைப் பொருளியல் I<br>இலத்தீன் I |
| 04 - 08 - 1998 | 9.00-12.00 | பிரயோக கணிதம் II<br>விலங்கியல் II<br>கிரேக்க உரோம நாகரிகம் I | 13.00-16.00 | வரலாறு II (இந்திய)<br>வரலாறு II (ஐரோப்பிய)<br>பகுதி II (13-00—15-00)<br>பகுதி I (15-00—16-00) |
| 05 - 08 - 1998 | 9.00-12.00 | தூயகணிதம் I<br>பௌத்த நாகரிகம் I | 13.00-16.00 | மனைப்பொருளியல் II<br>இலத்தீன் II |
| 06 - 08 - 1998 | 9.00-11.00<br>9.00-12.00 | தாவரவியல் I<br>பௌத்தம் I<br>தமிழ் I | 13.00-16.00 | தூயகணிதம் II<br>பௌத்த நாகரிகம் II |
| 08 - 08 - 1998 | 9.00-12.00 | தாவரவியல் II<br>பௌத்தம் II<br>தமிழ் II | 13.00-16 00 | சங்கீதம் I |
| 10 - 08 - 1998 | 9 00-11.00<br>9 00-12.00 | இரசாயனவியல் I<br>பொருளியல் I<br>பகுதி II (9-00—11-00)<br>பகுதி I (11-00—12-00)<br>மலாய் I<br>பேர்சிய மொழி I<br>ஹிந்தி I | 13.00-16.00 | சங்கீதம் II |
| 11 - 08 - 1998 | 9.00-12.00 | இரசாயனவியல் II<br>பொருளியல் II<br>பகுதி II (9 00—11-00)<br>பகுதி I (11-00—12-00)<br>மலாய் II<br>பேர்சிய மொழி II<br>ஹிந்தி II | 13.00-16.00 | நாட்டியம் I<br>அரபு I<br>ஜப்பானிய மொழி I |
| 12 - 08 - 1998 | 9 00-11.00<br>9.00-12.00 | பௌதிகவியல் I<br>கணக்கீடு I | 13.00-16.00 | நாட்டியம் II<br>அரபு II<br>ஜப்பானிய மொழி II |
| 13 - 08 - 1998 | 9.00-12.00 | பௌதிகவியல் II<br>கணக்கீடு II<br>ஜேர்மன் I<br>ருசியன் I<br>உருது I<br>சீன மொழி I<br>சித்திரக்கலை I | 13.00-15.00 | விவசாய விஞ்ஞானம் I<br>கிரேக்க உரோம நாகரிகம் II |
| 14 - 08 - 1998 | 9.00-12.00 | சிங்களம் I | 14.00-17.00 | விவசாய விஞ்ஞானம் II<br>ஜேர்மன் II<br>ருசியன் II<br>உருது II<br>சீன மொழி II |
| 15 - 08 - 1998 | 9.00-12.00 | சித்திரம் II<br>ஆங்கிலம் I<br>கணிதம் I | 13.00-16.00 | இந்து நாகரிகம் I<br>இஸ்லாமிய நாகரிகம் I<br>பாளி I |
| 17 - 08 - 1998 | 9.00-12.00 | சிங்களம் II | 13.00-16.00 | வணிகக்கல்வி I<br>பகுதி II (13-00—15-00)<br>பகுதி I (15-00—16-00) |
| 18 - 08 - 1998 | 9.00-12.00 | சித்திரம் III<br>ஆங்கிலம் II<br>கணிதம் II | 13.00-16.00 | வணிகக்கல்வி II<br>பகுதி II (13-00—15-00)<br>பகுதி I (15-00—16-00) |
| 19 - 08 - 1998 | 9.00-12.00 | புவியியல் I | 13.00-16.00 | இந்துநாகரிகம் II<br>இஸ்லாமிய நாகரிகம் II<br>பாளி II |
| 20 - 08 - 1998 | 9.00-12.00 | புவியியல் II<br>பகுதி II (9-00—11-00)<br>பகுதி I (11-00—12-00) | 13.00-16.00 | அளவையியலும் விஞ்ஞானமுறையும் I |
| 21 - 08 - 1998 | 9 00-12.00 | புவியியல் III<br>பகுதி II (9-00—11-00)<br>பகுதி I (11-00—12-00) | 14.00-17.00 | அளவையியலும் விஞ்ஞானமுறையும் II |
| 22 - 08 - 1998 | 9.00-12.00 | அரசியல் மூலதத்துவங்கள் I<br>பகுதி II (9-00—11-00)<br>பகுதி I (11-00—12-00) | 13.00-16.00 | கிரேக்கம் I<br>பிரெஞ்சு I<br>நாடகமும் அரங்கியலும் I |
| 24 - 08 - 1998 | 9.00-12.00 | அரசியல் மூலதத்துவங்கள் II<br>பகுதி II (9-00—11-00)<br>பகுதி I (11-00—12-00) | 13.00-16.00 | இந்துசமயம் I<br>கிறிஸ்தவம் I<br>இஸ்லாம் I<br>சமஸ்கிருதம் I |
| 25 - 08 - 1998 | 9.00-12.00 | வணிகப்புள்ளி விவரவியல் I<br>நாடகமும் அரங்கியலும் II | 13.00-16.00 | இந்துசமயம் II<br>கிறிஸ்தவம் II<br>இஸ்லாம் II<br>சமஸ்கிருதம் II |
| 26 - 08 - 1998 | 9.00-12 00 | வணிகப்புள்ளி விவரவியல் II<br>நாடகமும் அரங்கியலும் III | 13.00-16.00 | கிரேக்கம் II<br>பிரெஞ்சு II |

# அடியவர்...

(ஏழாம் பக்கத் தொடர்)

குருபூசைத்தினங்களில்நாயன்மாருக்கு அபிஷேகம் செய்து அவர்கள் வீதி உலா வருவதும் குறிப்பிடத்தக்கது.

பௌர்ணமி தினத்தன்று அந்தி மயங்கும் நேரம் ஆழ் கடலில் இருந்து முழு நிலா எழுந்து - நிலா ஒளியானது அம்பிகையின் ஆலயத்தினுட் புகும் வேளை ஸ்ரீசக்கர பூசை நடைபெறும். துறைதோய்ந்த வேதியர்களின் மந்ர உச்சாடனம்ஆலயத்தினுள்நிறைந்து நிற்கும் புற உலக இச்சைகள் அனைத்தையும் மறந்து அவள் அருளை வேண்டி நிற்பர்.

வருடாந்த மகோற்சவத்தின் போது அம்பிகை தனது பாலகர்களுடன் தேருக்கு எழுந்தருளுகின்ற காட்சி அற்புதமானது. காண்பதற்கு அரியது. அக்காட்சியினைக் கண்டு நிற்கின்ற அடியார்களின் நெஞ்சம்நெகிழ்ந்துருக மெய் அருப்பி விதிர் விதிர்க்கின்றது. கண்ணீர் ததும்ப, உள்ளம் வெதும்புகிறது. இவ்வருட் காட்சியினை ஒரு முறை அனுபவித்தவர்கள் மீண்டும் மீண்டும் அனுபவிக்கத் துடிக்கிறார்கள். அவள் நிழல் நாடி இங்கு ஓடி வருகிறார்கள். கணக்கில்லாது தாம் பெற்ற கஷ்டங்களை அன்னையிடம் முறையிட்டுக் கதறி அழுகிறார்கள். எம் தாயிடம் கூறிவிட்டோம் என்கின்ற மனநிறைவுடனும், அவள் நிச்சயமாகத் தீர்த்து வைப்பாள் என்கின்ற அசையாத நம்பிக்கையுடனும் திரும்பிச் செல்கிறார்கள், அவர்கள் மீண்டும் வருவார்கள் தம் குறைதீர்த்த அன்னைக்குக் காணிக்கை செலுத்துவதற்காகத்.இதுநாம்இந்த ஆலயத்தில் அனுபவத்தில் கண்ட உண்மை,

அன்னையே! உனது குழந்தைகளாகிய எமது குறைகளையும், காலங்காலமாக அனுபவித்து வரும் துன்பங்களையும் நீக்கி எம்மை இரட்சித்து அருள்வாயாக. உன் பாதக் கமலங்களைப் பற்றி நிற்கும் அடியவர்கள் ஒரே குரலில் வேண்டும் வரம் இதுவே.

நம்பிக்கையுடன் சரணடைந்தவர்களை அன்னை ஒருபோதும் கைவிடுவதில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாஜ்பாய் இலங்கைவர முன் அவருக்கு தமிழர் பிரச்சினை பற்றி விளக்குக

### ஜெயலலிதாவிடம் எம். ஜி. ஆர். பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

"இந்தியப் பிரதமர் வாஜ்பாய் இலங்கை வர முன்னர் ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு, அவர்களின் அபிலாஷைகள் குறித்து அவருக்கு விளக்கமளிக்கவும்."

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனைத்துலக எம். ஜி. ஆர். பேரவையின் இலங்கைக் கிளை மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளது.

அக்கிளையின் தலைவர் பொன். மதிமுகராசா ஜெயலிதாவுக்கு அனுப்பியுள்ள "பக்ஸ்" செய்தியிலேயே மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழர் பிரச்சினைகுறித்துத் தாங்கள் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் மனுக் கொடுத்துள்ளதை அறிந்து ஈழத் தமிழர்கள் புளகாங்கிதமடைந்துள்ளனர். தங்களின் துணிச்சலான இந்தச் செயற்பாட்டுக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அத்துடன் கீழ்க்காணும் கோரிக்கைகளைத் தங்களின் மேலான கவனத்துக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

★ பிரதமர் வாஜ்பாய் இலங்கைக்கு வருவதற்குமுன்னர் அவரிடம் இலங்கைத் தமிழரின் போராட்ட வரலாறு, அவர்களின் அபிலாஷைகள் ஆகியன தொடர்பாக விவரமாக எடுத்து விளக்க வேண்டும். தமிழர் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் அல்ல; அது உரிமைப் போராட்டம் என்பதை அவருக்கு விளக்கிக் கூறவேண்டும்.

★ இலங்கைத் தமிழர் விடயத்தில் யுத்த நிறுத்தம் ஏற்படவும், விடுதலைப் புலிகள் பங்களிப்புடன் பேச்சுக்கள் ஆரம்பிக்கவும் இலங்கை அரசாங்கத்தைப் பிரதமர் வாஜ்பாய் நிர்ப்பந்தம் செய்யத் தாங்களும் தங்கள் கூட்டணிக் கட்சிகளும் கோரவேண்டும்.

★ ஈழத் தமிழர்களுக்காகத் தங்களின் தார்மீக உறவு தொடரவேண்டும். அதன் மூலம் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்பட்டு நிம்மதியான வாழ்க்கை அமைக்கத் தாங்கள் தொடர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காவிட்டால் தனியான தமிழீழமே தீர்வு என்று பத்திரிகையாளர் மாநாட்டில் தங்களால் வழங்கப்பட்ட பேட்டியில் கூறப்பட்டுள்ள கருத்தானது வாடிக்கிடக்கும் ஈழம் வாழ் தமிழ் மக்களின் மனதை மகிழ்ச்சியடையச் செய்திருக்கின்றது.

சார்க் மாநாட்டுக்கு வருகைதரும் இந்தியப் பிரதமரிடம் வற்புறுத்தி எடுத்துச் சொல்லக்கூடிய துணிவும் இடித்துச் சொல்லக்கூடிய ஆற்றலும், ஆளுமையும் மக்கள் சக்தி படைத்த தங்களிடமே உண்டு. தாங்களும் தோழமைக் கட்சிகளும் எங்கள் புனிதப் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன் — என உள்ளது. (இ-3-15-139)

## பலாலி வீதி ஊடாகச் செல்ல

# தொழில்நுட்பக்கல்லூரிக்கு தற்காலிக பாதை

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக வாசல் வழியாக போக்குவரத்து மேற்கொள்வதற்கு தற்காலிக பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இடப்பெயர்வுக்குப் பின் தொழில்நுட்பக் கல்லூரியின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போது பாதுகாப்புக் காரணங்களுக்காக பின்புற மதிலை உடைத்தே போக்குவரத்துப்பாதையாகப் பயன்படுத்தப்பட்டது. இதனால் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. கல்லூரி நிர்வாகம் நடவடிக்கை எடுத்ததையடுத்து மேற்படி கல்லூரியின் முன்புற வாயில் வழியாக நேரே புளியடி ஒழுங்கை ஊடாக பலாலி வீதிக்குச் செல்லக் கூடியவாறு புதிய பாதை அமைக்கப்பட்டு போக்குவரத்துக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை —

கலட்டிச் சந்தியூடாக பிறவுண் வீதிப்பாதையை கல்லூரிக்கு இருபுறமும் உபயோகிக்க முடியாமலிருப்பதால் போக்குவரத்துச் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் —

சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டுமெனவும் —

கல்லூரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-ரீ)

# கூட்டுறவாளர் தினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

திருநெல்வேலி, ஜூன் 25

சர்வதேச கூட்டுறவாளர் தினம் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் இக்கூட்டுறவாளர் தினததை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.

வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு சுற்றறிக்கை ஒன்றை சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கூட்டுறவு நிறுவனங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சுப் போட்டிகளையும், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களுக்கிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளையும் ஒழுங்கு செய்து நடத்துமாறும் தமது பகுதியில் சமூக அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், மரம் நாட்டுதல் ஆகியனவற்றை ஏற்பாடு செய்யுமாறும் மேற்படி சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல நோக்குகூட்டுறவு சங்க மட்டம், மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய நிலைகளில் இப்போட்டிகள் நடைபெற வேண்டும் என்றும் இதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-135)

# கனடாவின் ஒட்டாவாவில் துணைவேந்தர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

பொதுநலவாய அமைப்பு நாடுகளைச் சேர்ந்த அனைத்து பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்குமான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை கனடா செல்ல உள்ளார்.

பொதுநலவாய அமைப்பு நாடுகளைச் சேர்ந்த பல்கலைக் கழக துணைவேந்தர்களுக்கான மாநாடு ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடைபெற்று வருகின்றது. இம்முறை இந்த மாநாடு கனடாவின் ஒட்டாவா நகர பல்கலைக்கழகத்தில் நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் அங்கு செல்ல உள்ளார்.

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 16ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் உலகின் பல பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் பங்குபற்ற உள்ளனர்.

1993 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து அமரர் பேராசிரியர் துரைராஜாவும் —

1988 ஆம் ஆண்டு மொறிஸியஸிலும், 1983 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிலும் நடைபெற்ற இந்த மாநாடுகளில் அப்போதைய துணைவேந்தர் அமரர் பேராசிரியர் சு. வித்தியானந்தனும் கலந்து கொண்டனர். (ஐ - 9)

# 3 கோடி ரூபாவுக்கு உபகரணங்கள்

யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக்கு மூன்று கோடி ரூபா பெறுமதியான உபகரணங்களை வழங்குவதற்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் (யூ.என்.டி.பி.) முன் வந்துள்ளது.

மேற்படி கல்லூரி நிர்வாகத்தினால் கொடுக்கப்பட்ட திட்டங்களுக்கமைவாக தற்போது ஒரு தொகுதி உபகரணங்கள் யூ.என்.டி.பி. ஊடாக கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளன.

இதுவரை 60 கே. வி. ஏ. ஜெனரேட்டர் ஒன்றும், வானொலி இலத்திரனியல், நீர்க்குழாய் பொருத்துதல், மோட்டார் எந்திரவியல் போன்ற சில கற்கை நெறிகளுக்கான பயிற்சி உபகரணங்களும் இவ்வாறு எடுத்து வரப்பட்டுள்ளன. (ஐ-ரீ)

## கலை விழா

தென்மராட்சி, ஜூன் 25

சாவகச்சேரி பழனி ஆண்டவர் ஆலய ஆதரவில் நடத்தப்படும் புவேந்தன் பாலர் பாடசாலைச் சிறுவர்களின் கலைவிழா எதிர்வரும்ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு பாலர் பாடசாலையில் சாவகச்சேரி நகரகிராம அலுவலர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறும். (இ-117)

## தண்ணீர் தாங்கி

யாழ்ப்பாணம், ஜூன் 25

கொடிகாமம் ஆஸ்பத்திரியில் நோயாளர் தங்கு மண்டபம், தண்ணீர் தாங்கி போன்றவை [illegible] ஐ. நா. தா தரகத்தினால் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. (இ-5)

# கட்டட வேலைகள் சிமெந்து இன்றி பாதிப்பு

தென்மராட்சி, ஜூன் 25

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினால் பளை பலநோக்குக் கூட்டுவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட சிமெந்து இன்னமும் பொதுமக்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய பிரதேசமான பளையில் கிணறுகள், மலகூடங்கள் அமைப்பதற்கு கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோரின் சிபார்சுடன் பலர் விண்ணப்பித்துள்ள போதிலும் சங்கத்திற்கு சிமெந்து கொண்டு வரப்பட்டு ஒரு மாதமாகியும் இன்னமும் அது விநியோகம் செய்யப்படாமல் உள்ளது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பாக சங்க நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போது கிணறுகள், மலகூடங்கள், வீடுகள், ஆலயங்கள் போன்றவற்றுக்கென இம்முறை பெருமளவு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளனவென்றும் —

இவற்றின் அவசியம் கருதி ஒரு விண்ணப்பத்திற்கு தலா பத்துப் பைக்கற் சிமெந்து வீதம் வழங்குவதானாலும் இன்னமும் ஆயிரம் பைக்கற் சிமெந்து தேவையாக உள்ளது எனவும் —

சமாசத்தினால் வழங்கப்பட்ட 300 பைக்கற் சிமெந்தினை எவ் வகையில் பகிர்ந்தளிப்பது என்ற சிக்கலினால் இதுவரை சிமெந்து விநியோகம் செய்யப்படவில்லை எனவும் சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தெரிவித்தார். (ஐ-117)

# பற்சிகிச்சையாளருக்கு சீருடை அணிய பணிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்25

யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை பற்சிகிச்சையாளர் கடமையின்போது சீருடை அணியாது விட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சிவபாதம் பணிப்புரை விடுத்துள்ளார்.

சுகாதாரத் திணைக்களங்களில்கடமையாற்றும் அனைவருக்கும் சீருடைகள் வழங்கப்பட்டு வருகின்ற போதும் பாடசாலை பற்சிகிச்சையாளர்கள் சீருடையுடன் கடமைக்குச் சமுகமளிப்பதில்லை.

இவர்கள் சீருடையுடன் கடமைக்கு சமுகமளிக்க

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமய சந்திகளில்

பெரியவிளான் புனித யுவானியார் ஆலயத் திருநாள் இம்மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

26 ஆம், 27ஆம் திகதிகளில் திருநாளுக்கு முன்னோடியாக மாலை வழிபாடுகள் இடம் பெறும். (இ-173)

★ ★ ★

பளை, புலோப்பளை புனித பேதுருவானவர் (சென். பீற்றர்) தேவாலய நவநாள் உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு திருநாள் ஆராதனையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறும்.

மறுநாள் காலை 7.30 மணிக்கு திருநாள் கூட்டுப் பலிபூஜையும் நடைபெறும். (இ-117)

★ ★ ★

சாவகச்சேரி நுணாவில் மத்தி ஸ்ரீவரதப பெருமான் ஆலயததில் லட்சார்ச்சனை எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும். (இ-117)

★ ★ ★

மிருசுவில் வடத்தற்பளை சம்பாவெளி வீரகத்தி விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும். (இ-117)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி, நாவலடிப் பிள்ளையார் கோயிலில் நாளை வெள்ளிக்கிழமை பகல் விசேட பூஜையும், சாவகச்சேரி முருகமூர்த்தி ஆலய பஜனைக்குழுவினரின் பிரார்த்தனைப் பாடல்களும், இந்து இளைஞர் மன்றத் தலைவர் கே. தனபாலனின் சமயச் சொற்பொழிவும் இடம்பெறும். (இ-117)

★ ★ ★

நவாலி, ஜூன் 25

வண்ணை வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். (ஐ-ரீ-100)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 25

நல்லூர் பாணன்குளம் நாச்சி அம்மன் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் சனீஸ்வர பகவானுக்கு சாந்தி ஹோமம் நடைபெறும். (ஐ-ரீ)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூன் 25

பொலிகண்டி கந்தவனக் கடவை அருள்மிகு சுப்பிரமணிய தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ தினங்களை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை முதல் 15 தினங்கள் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தற்போது புனருத்தாரணப்பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-8-109-173)

★ ★ ★

கந்தர்மடம் — அரசடி வீதி அருள்மிகு செல்வநாக பூஷணி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக்கிழமைமுதல் ஆரம்பமாகித் தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று 14 ஆம் நாள் தேர் உற்சவமும், 15 ஆம் நாள் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

வண். வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள் மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான சாந்தீக மஹோற்சவம் இன்று வியாழன் மாலை 3 மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து 15 நாட்கள் இடம்பெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் ஜூலை மாதம் 8ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 9 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (இ- 100)

★ ★ ★

கொககுவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய மணவாளக் கோல விழா நாளை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு விஷேட பூஜை ஆராதனைகளும் மாலை 4 மணிக்கு விஷேட பூஜையைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் திருவூஞ்சலும் இடம் பெறும்.

மாலை 5 மணியளவில் அம்பாள் பூந்தண்டிகையில் வீதி வலம் வருங்காட்சியும் இடம் பெறும். (இ-ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரண நிறுத்தத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

னத்தையிட்டு வெகுவாக மனம் வருந்துகிறேன். எமது மண்ணில் நடைபெற்றுவரும் போர்க் கொடுமையால் உற்பத்திகள் முடக்கப்பட்டு வேலைவாய்ப்பின்றி மக்கள் ஏதிலிகளாக்கப்பட்டுள்ளனர். பலர் பாரம்பரிய இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழுகின்றனர். தற்போது வழங்கப்பட்ட நிவாரணம் ஓரளவே. மக்களின் வயிற்றில் அடிக்கும் இந்தத் தீர்மானம் கொடூரமானது. எனவே இந்தத் தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டுமென மக்களின் சார்பில் அரசைக் கேட்டுக்கொள்கிறேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## திட்டமிட்டபடி...

(முதலாம் பக்கத் தொடர்)

களுத்துறை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி ஆரம்பித்துள்ள உண்ணாவிரதத்துக்கு ஆதரவு தெரிவித்தும் —

கைது செய்து காணாமல்போனோர் தொடர்பான முடிவுகளை அரசு வெளியிடவேண்டும் எனக்கேட்டும்—

சுதந்திரபுரத்தில் இடம்பெற்ற அப்பாவி மக்களை பலிகொண்ட குண்டு வீச்சைக் கண்டித்தும்— இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

இந்த உண்ணாவிரதத்துக்கு ஈ. பி. டி. பி. அமைப்பும் ஆதரவு வழங்குவதாக தெரிவித்துள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்த உண்ணாவிரதத்துக்கான அழைப்புக்களை வெளிநாட்டு, உள்நாட்டு தொண்டர் நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள், மதநிறுவனங்கள், பொதுஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கு அனுப்பி வைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பொது உடன்பாட்டின் கீழ் போராட்டங்களை முன்னெடுக்க ''மனித அநீதிகளுக்கு எதிரான போராட்ட அமைப்பு'' என்ற பெயரில் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. (இ-3)

## களுத்துறை..,

(முதலாம் பக்கத் தொடர்)

போராட்டத்தில் முதல் கட்டமாக ஒரு தொகை கைதிகள் கலந்து கொண்டனர்.

உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக நேற்று சட்டமா அதிபருடன் தாம் பேசியதாகவும் —

சட்டமா அதிபருடன் நாளை அல்லது நாளை மறுதினம் களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்று அவர்களின் பிரச்சினை குறித்து நேரில் ஆராயவிருப்பதாகவும்— ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். (இ-3)


உ

'' ஸ்ரீ விராட் விஸ்வப்மபிரம்னே நமஹ ''

**SWISSO GOLD CUTTING CENTRE**

தங்க நகைகளை அதி நவீன டிசைன்களில் வெட்டித் தரப்படும். பவுண் மணியும் வெட்டித்தரப்படும்.

**சுவிஸ்ஸோ கோல்ட் கட்டிங் சென்ரர்,**

44/1 யாழ். வீதி, யாழ்ப்பாணம்.

(57111)

**தூரிகை நுண்கலை வளாகம்**

சட்டநாதர் வீதி, நல்லூர்.

வளரும் மாணவ கலைஞர்களின் ஆக்கங்களுடன்

**"அரும்புகள்"**

**ஓவியக் கண்காட்சி -98**

ஜூன் 26, 27, 28

காலை முதல் மாலை வரை.

★ பாடசாலை மாணவர்கள் தவறாது பார்த்துப் பயன்பெற அழைக்கின்றோம்.

அனைவரும் வருக!

— தூரிகை மாணவர்கள்.

விளம்பர அன்பளிப்பு





**P. J. பர்னாண்டோ**

542, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/4108)


# களுத்துறையில் இருந்து
# 7 பேர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

குடாநாட்டில் 1997 செப்ரெம்பர், ஒக்ரோபர் மாத காலப் பகுதியில் கைது செய்யப்பட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழுபேர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

பிணைப்பணம் செலுத்த வசதி இல்லாததால் இவர்கள் தொடர்ந்து தடுப்புக் காவலில் இருந்து வந்தனர். மனித கௌரவத்துக்கான அமைப்பின் செயலாளர் மகேஸ்வரி வேலாயுதம் இவர்களுக்கான பிணைப் பணத்தைச் செலுத்தியதை அடுத்து இவர்கள் ஏழுபேரும் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட ஏழு பேரினதும் விவரம் வருமாறு:-

★ பொன்னம்பலம் தனவீரசிங்கம் (சரசாலை)

★ ஜெகநாதன் சத்தியேந்திரன் (ஆனைக்கோட்டை)

★ மகாலிங்கம் கமலராசன் (மீசாலை)

★ ராஜரத்தினம் கமலஹாசன் (கோண்டாவில் மேற்கு)

★ சின்னப்பா கமலதாசன் (கொடிகாமம்)

★ சச்சிதானந்தம் சசிகரன் (படித்த மகளிர் குடியேற்ற திட்டம் மிருசுவில்)

★ தெய்வேந்திரன் ரகு (நீர்வேலி)

(ஐ)

## பற்சிகிச்சை...

(ஒன்பதாம் பக்கத் தொடர்)

வேண்டும் என்று சுகாதார அமைச்சு செயலாளரும் அண்மையில் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி, கோப்பாய் மத்திய மருந்தகம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, பருத்தித்துறையில் உடுப்பிட்டி மகளிர்கல்லூரி, தெல்லிப்பழையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி போன்றவற்றில் பாடசாலை பற்சிகிச்சை நிலையம் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சீருடை அணிவதன் அவசியத்தை வலியுறுத்திமாகாண பிரதிப் பணிப்பாளர் மேற்குறிப்பிட்ட நிலையங்களில் கடமையாற்றும் பற்சிகிச்சையாளர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளார். (இ-5)

## பதவிக் காலம்...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்தச் சவாலுக்குப் பதில் அளிக்கு முகமாகவே ஜனாதிபதியின் நேற்றைய அறிவிப்பு வெளிவந்தது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 1994 நவம்பர் நடுப் பகுதியில் பதவிக்கு வந்தார்.

இதன்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2 ஆயிரம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நடைபெற வேண்டும்.

ஆனால் ஜனாதிபதி ஒருவர் பதவி ஏற்ற நாளிலிருந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் தேர்தலை நடத்துவதற்கு அரசமைப்பில் ஏற்பாடு உள்ளது.

இதன்படி இந்த ஆண்டு நவம்பர் நடுப்பகுதிக்குப் பின்னர் ஜனாதிபதி விரும்பினால் தேர்தலை நடத்த முடியும். (இ-6-3-21)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ சுந்தரபாண்டியன்

★ ஜாலி

★ கரகாட்டக்காரன்

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்.

(சி/4111)

எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ சுந்தரபாண்டியன்

( Pyramid )

★ ஜாலி

( Pyramid )

**சுப்பஸோ வீடியோ**

யாழ்ப்பாணம்.

(சி/4112)


## பல்கலைக்கழக அனுமதி: விண்ணப்பப் படிவங்கள்

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்கள் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணத்துக்கு விமான மூலம் எடுத்து வரப்படுவதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுடன் தொடர்பு கொண்டதையடுத்து, ஒரு தொகுதி படிவங்கள் முகவரான பூபாலசிங்கம் புத்தகசாலையில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் —

படிவங்கள் இன்று அல்லது நாளை இங்கு வந்து சேரும் என்றும் — அவர் தெரிவித்தார்.

விண்ணப்ப முடிவு திகதி நாளை ஆகும். (இ-3)

## படைக்கு ஆள்சேர்ப்பு

கொழும்பு, ஜூன் 25

இலங்கை இராணுவத்தின் நிரந்தரப் படைக்கு ஆள்கள் சேர்க்கப்படுவதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெற்றுவருகின்றன.

18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இராணுவத்தில் சேர தகுதியுடையவர்கள் என்றும்—

நேர்முகப் பரீட்சைக்கு வரும்போது பிறப்புச் சான்றிதழ், பாடசாலை விலகற் சான்றிதழ், கிராம அதிகாரியின் சன்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றுடன் சமுகமளிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ-6)

## வாஜ்பாயின்.

(முதலாம் பக்கத் தொடர்)

பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது அ. தி. மு. க தொண்டர்கள் வாஜ்பாயின் கொடும்பாவியை எரித்தனர்.

உள்துறை அமைச்சர் அத்வானிக்கு எதிராகவும் இவர்கள் கோஷங்களை எழுப்பினர். (இ. 6)

## வெளிநாட்டுத்..

(முதலாம் பக்கத்தொடர்)

நோர்வே, கனடா நாடுகளின் தூதுவர்களை நேற்றுச் சந்தித்ததாகவும்—

ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா, பிரிட்டன், நெதர்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்களை இன்றும் நாளையும் சந்திக்க விருப்பதாகவும் — டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அதே நேரம் — நிவாரண வெட்டுத் தொடர்பாகச் சகல தமிழ்க்கட்சிகளுடனும் பேச்சு நடத்த கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதியிடம் டக்ளஸ் தேவானந்தா கோரிக்கை விடுத்துள்ளார். (இ-3)

## உண்ணாவிரதம் இருந்தவர் மரணம்

மட்டக்களப்பு, ஜூன் 25

மகாவலி வலயத்தில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு இருந்த 55 வயது ஊழியர் ஒருவர் நேற்று மரணமானார்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையிடம் 36 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த ஒருவார காலமாக இவர் உண்ணாவிரதம் இருந்துவந்தார்.

இரத்தினபுரி அதிகார சபையின் அலுவலகம் முன்பு இவர் தனது போராட்டத்தைக் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பித்தார். (இ-21)

## ஐ.நாவுக்கான அமெ. தூதுவர் ஹோல்புரூக்

வாஷிங்டன் ஜூலை 25

ஐ. நாவில அமெரிக்கப் பிரதிநிதியாக ரிச்சர்ட் ஹால்புரூக் என்பவரை அதிபர் பில் கிளின்ரன் நியமித்திருக்கிறார்.

முன்னர் யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஹோல் புரூக் பெரிதும் உதவினார். அவருடைய 21 நாள் முயற்சி காரணமாக 1995ஆம் ஆண்டு டேட்டன் சமாதான ஒப்பந்தம் சாத்தியமானது.


**சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்**

மருந்துக் கலவையாளர், தொண்டர்களுக்கான

**கலந்துரையாடல்**

மேற்படி கலந்துரையாடல் **29—06—98** ஆம் திகதி திங்கட்கிழமை கொக்குவில் கிழக்கு மாத்தனை கந்தசாமி கோயிலுக்கு முன்பாகவுள்ள சங்கப் பணிமனையில் சங்கத் தலைவர் நா. கணேசன் தலைமையில் காலை **9. 00** மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் வட-கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. பாலசுப்பிரமணியம், கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கா. பரநிருபசிங்கம், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. வே. கிருஷ்ணசாமி ஆகியோர் சமுகமளித்து கருத்துரைகள் வழங்கவுள்ளனர். எமது சங்கத்தின் மூலம் ஏற்கனவே மருந்துக் கலவையாளர் தொண்டர் பயிற்சி பெற்றவர்களை இக் கலந்துரையாடலில் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்

சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்,

சம்பியன் ஒழுங்கை,

கொக்குவில் கிழக்கு,

கொக்குவில்.

(57112)


இப்பத்திரிகை நியூ உதயன பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-06-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org